தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 367

### விநாயகர் விரதம் முதலான

# விரதங்களின் மகிமை

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

தஞ்சாவூர்

2005

விலை : ரூ. 40-00

Thanjavur Sarasvati Mahal Series No. : 367

# ।। व्रतमहिमा ।।

(विनायकादिव्रतषट्ककथाः)

விநாயகர் விரதம் முதலான

# விரதங்களின் மஹிமை

ஆசிரியர் :

பர்வத சஞ்ஜீவி என்னும் மலைமருந்தன்

பதிப்பாசிரியர் :

சாஹித்ய சிரோமணி

திருமதி. S. இராஜலக்ஷ்மி

ஸம்ஸ்கிருத பண்டிதர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

2005 ] [ விலை: ரூ. 40-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | : விரதங்களின் மஹிமை |
| பதிப்பாசிரியர் | : S. இராஜலக்ஷ்மி |
| வெளியிடுபவர் | : இயக்குநர், சரசுவதி மகால் நூலகம் |
| வெளியீட்டு எண். | : 367 |
| மொழி | : சம்ஸ்கிருதம், தமிழ் |
| பதிப்பு | : இரண்டாம் பதிப்பு |
| வெளியீடு | : ஆகஸ்ட், 2005 |
| தாள் | : T N P L 17.8 kg. |
| நூல் அளவு | : 24 செ. மீ. X 14. செ. மீ. |
| பக்கங்கள் | : 84 |
| படிகள் | : 500 |
| எழுத்து | : 14 மற்றும் 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம் |
| புத்தகக்கட்டு | : மெலிந்த அட்டை |
| பொருள் | : சமயம் (விரதங்கள்) |
| விலை | : ரூ. 40-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

சைவம், வைணவம், சாக்தம் போன்ற வைதீக சமய நெறிகளிலும், பௌத்தம் சமணம், இஸ்லாம், கிருத்துவம் போன்ற சமயநெறிகளிலும் நோன்புகள் மேற்கொள்வது என்பது பண்டுதொட்டு தொடரும் சமய சம்பிரதாயமாக இருந்துவருகின்றது. நாடு, இடம், மக்கள் பழக்க வழக்கங்கள் ஆகியவை அடிப்படையிலும் விரத சம்பிரதாயங்கள் வேறுபடும்.

உணவின்றி நோன்பு நோற்று தங்கள் உள்ளக்கிடக்கைகளை நிறைவேற்ற இறைவனை வேண்டுதலே இத்தகைய விரதங்களின் நோக்கமாகும். இந்து சமயத்தின் மிகத்தொன்மையான காலந்தொடங்கியே இத்தகைய விரதங்களை மக்கள் கடைபிடித்து வருகின்றனர். அவற்றில் ஆறு விரதங்களைப் பற்றிய சுவடிகள் சரசுவதி மகால் நூலகத்தில் உள்ளன. அவை வடமொழியிலும், தமிழிலும் அமைந்துள்ளன. சிவன், தேவி, விநாயகர், திருமால் ஆகிய தெய்வங்களுக்குரிய விரதங்களின் வரலாற்றையும், அவற்றைப் பின்பற்றவேண்டிய முறைகளையும், பின்பற்றியோர் அடைந்த பலன்களையும் அச்சுவடிகள் எடுத்துக் கூறுகின்றன. இவைகளின் தொகுப்பாக திருமதி எஸ். இராஜலெக்ஷ்மி அவர்களால் பதிப்பிக்கப்பெற்றதே **விரதங்களின் மகிமை** என்னும் இந்நூலாகும்.

இந்நூலைப் பதிப்பித்த பதிப்பாசிரியரையும், சிறப்புற அச்சிடுவதற்குக் காரணமாகத் திகழ்ந்த நிருவாக

வேதம், ஆகமம், தர்மசாஸ்திரம், இதிஹாஸம், புராணம் ஆகியவைகளில் ஆத்மக்ஷேமத்திற்கான வழிகள் சொல்லப்பட்டு இருக்கின்றன. எல்லா தர்மங்களையும், கதையாகச் சொல்வது இதிஹாஸம். ஒவ்வொரு தர்மத்தையும் கதையாகச் சொல்வது புராணம்.

நமக்கு ஞானத்தைக் கற்பிக்க வேதங்களும், இதிஹாஸங்களும் உள்ளனவே, எதற்காக இந்தப் புராணங்கள் என்று சிலர் கேட்கலாம். **வேதவாக்கியம்** தந்தை சொல்லைப் போன்றது. ப்ரபு ஸம்ஹிதை என்று கூறுவார்கள். அது ஒரு தந்தையைப் போல, இதைச் செய், இதைச் செய்யாதே என்று கட்டளையிடும். **இராமாயணம், மகாபாரதம்** போன்ற இதிஹாஸங்கள் இல்லத்தரசியின் சொல்லைப் போன்றவை. இதனை சம்ஸ்கிருதத்தில் 'காந்தா ஸம்ஹிதை' என்பர். அவை நீதிகளை ஒரு மனைவி தன் கணவனுக்கு எடுத்துச் சொல்வது போல இங்கிதமாகவும், ரஸமாகவும், வெளிப்படையாகவும் எடுத்துச் சொல்லும். புராணங்களோ நண்பனுடைய சொல்லைப் போன்றது. ஸுஸ்ருத்ஸம்ஹிதை என்று கூறுவார்கள். அவை தன் நண்பர்களுக்கு நட்பு முறையில் ஹிதத்தை எடுத்துச் சொல்வதுபோல, கதைகள்மூலம் நீதிகளை எடுத்துச் சொல்கின்றன. மேலும், வேதத்தினுடைய அங்கங்கள் ஆறு. அவை சிக்ஷா, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்ப்பம் என்பன. இவை ஒவ்வொன்றும் வேதத்தை அறிவதற்கும், அவற்றைப் பயன்படுத்துவதற்கும், அவற்றின் பொருளை அறிவதற்கும், அவற்றை எளிதில் பிழையின்றிக் கற்பதற்கும் வழிகாட்டுகின்றன.

இன்னது என்ற சொல்லால் விளக்கமுடியாததாகவும், மனதிற்கு அப்பாற்பட்டதாகவுமிருக்கும் ஒன்றை ப்ரம்மத்தை-பரம்பொருளை நமது சௌகரியத்திற்காக நாம் விரும்பும் உருவம் கொடுத்தும், அவ்வுருவத்திற்குப் பல்வேறு காரணங்களைக்கூறிப் பெயரிட்டும் 'அதனை' வழிபடுகிறோம். அப்பெயர்களாலேயே அப்பொருளை வழிபடவும் செய்கிறோம். இதனை மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்தில்,

அலுவலர் திரு. இரா. சுப்பிரமணியன், வெளியீட்டு மேலாளர் டாக்டர். குடவாயில் பாலசுப்ரமணியன் ஆகியோர்க்கும், பதிப்புத்துறைப் பணியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூலினை அச்சிட நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மா. வீரசண்முகமணி**, இ. ஆ. ப.
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதிமகால் நூலகம்.

11-8-2005
தஞ்சாவூர்

# முகவுரை

இப்பூமண்டலத்தில் இமயம் முதல் குமரிவரை பரவியுள்ள பரத கண்டத்தை ஆரியர்கள் கர்மபூமி எனவும், புண்ணியபூமி எனவும் இருவிதமாய்ச் சொல்வதுண்டு. புண்ணிய பூமியில் கர்மாக்கள் விசேஷமாகச் செய்ய வேண்டியதில்லை என்றும், கர்ம பூமியில் அவசியமாக கர்மானுஷ்டானங்கள் செய்யவேண்டும் என்றும் பெரியோர் களால் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகையினால் இக்கர்ம பூமியில் நான்கு வருணத்தவர்களும் குலாச்சார விதியின்படி நித்திய கர்மானுஷ்டானங்களை அனுசரிக்கவேண்டி பிரம்மா வினாலும், மகரிஷிகளாலும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தர்மங்களை நடத்தி வருகிறார்கள்.

தர்மங்களை அடிப்படையாகக் கொண்ட பக்தியே உலகில் சிறந்தொன்றாகும். இவ்வுலகம் நால்வகையான கால கட்டங்களைக் கடந்து வருகிறது என்ற கோட்பாட்டின்படி கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்ற நால்வகை யுகங்கள் பேசப்படுகின்றன. கிருதயுகத்தில் ஞானத்தினால் முக்தி. திரேதாயுகத்தில் தானத்தினால் முக்தி. துவாபரயுகத்தில் யாகத்தினால் முக்தி. கலியுகத்தில் பக்தியினால் முக்தி.

பக்தி என்ற சொல்லுக்கு அன்பு என்பதே பொருள். 'பக்தி வலையில் படுவோன் காண்க' என்பது திருவாசகம். 'இறை' பக்திக்கே அகப்படுவான். 'அன்பெனும் பிடியுள் அகப்படு மலையே' என்ற தொடரும் இதனையே சுட்டுகின்றது. பக்தி, அன்பு என்ற இச்சொற்களின் நுண்பொருளாக "உள்ளமுருகுதல்" என்பதைக் கூறலாம். விருப்பதோடு நினைந்து, மீண்டும் மீண்டும் எண்ணி உவகையடைந்து உருகுவது என இதனை விவரிக்கலாம். எவ்வகையிலும் அடக்கவியலாத இறையினை இத்தகு அன்பின் கட்டுக்குள் கொண்டுவந்து விடலாம் என உலகின் அனைத்து சமயங்களும் ஒருமிக்கக் கூறுகின்றன.

ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரந்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணங் கொட்டாமோ.

என்று பாடியுள்ளார்.

இவ்வாறு நாம, ரூப பேதங்கடந்த ப்ரம்மத்திற்கு நாம ரூபங்களைக் கொடுத்து உபசாரங்கள் செய்து வழிபடுகிறோம். வேதங்கள்கூறும் யாக விதிகளைப் பற்றிக் கூறுவதுடன் இத்தகைய வழிபாட்டு முறைகளை கூறும் பகுதி **கல்பம்** என்ற பகுதியாகும். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை - பிரம்மத்தை - நினைப்பதோ, உணர்வதோ, அடைவதோ அனைவராலும் முடியாது என்ற காரணத்தால் உபநிடதங்ககளில் கூறப்பட்ட கருத்தை அனுசரித்து நம் முன்னோர்கள், உருவ வழிபாடு (ஸகுணோபாஸனை) அருவ வழிபாடு (நிர்குணோபாஸனை) என்ற இரண்டு பிரிவுகளாகப் பிரித்தனர். முதலில் ஸகுணோபாஸனை செய்துகொண்டே வந்தால் தானாகவே நிர்குணோபாஸனையில் அது கொண்டு சேர்த்துவிடும் என்று கூறியுள்ளனர். இக்கருத்தை ஆதிசங்கரர் இயற்றியுள்ள பிரபோத சுதாகரம் என்னும் நூலில் இக்கருத்தை வலியுறுத்துகின்றார்.

**स्थूला सूक्ष्मा चेति द्वेधा हरिभक्तिरुद्दिष्टा ।**
**प्रारम्भे स्थूला स्यात्सूक्ष्मा तस्याः सकाशाच्च ।।**

மாடிக்குச் செல்கின்ற ஒருவன், ஒவ்வொரு படியாகக் கடந்து மேலே செல்வதுபோல, ஸகுணோபாஸனைக்குப் பின்னர் நிர்குணோபாஸனை செய்யவேண்டும் என்பது கருத்து.

ஆதலால், உருவ வழிபாடாக விளங்கும் ஸகுணோ பாஸனைக்குரிய முறைகளைக் கூறும் நூல்களில் இறைவனை தியானம், ஆவாஹனம், ஆஸனம், அபிஷேகம், அர்ச்சனை மற்றும் உபசாரங்களால் இறைவனாகிய ஸகுணப்ரம்மத்தை விக்ரஹம் - சிலை - யந்திரம் போன்றவற்றை) வழிபட வேண்டும் என்ற நெறிமுறைகளை கல்ப்பம் என்னும் பகுதி

விளக்குகின்றது. இத்தகைய கல்ப்பம் என்ற பிரிவில் கூறப்பட்ட முறைகளைத் தழுவிப் புராண வாயிலாக எழுந்தவைகள்தான் இந்த விரதங்களின் கதைகளாகும்.

**விரதங்களின் பயன் :**

சில விரதங்களை இயற்றும்போது பட்டினி கிடந்து இயற்றவேண்டும் என்ற மரபு கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதனால் மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனுஞ் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலுங் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேஷமாக வழிபடுதல் விரதமாகும்.'

உடல், மனம் என்னும் இவ்விரண்டின் இயக்கத்திற்கும் மூலகாரணமாக விளங்குவது உணவாகும். உணவானது உண்பதும், பருகுவதும் ஆகிய இரண்டு வகையில் உள்ளது. (திட, திரவ வடிவங்கள்) உணவானது உடலில் சேர்ந்து மனத்தை இயங்கவைக்கிறது. எனவே, உணவுப்பழக்கத்தை வகைப்படுத்தினர் முன்னோர். **உடம்பாராயின் உயிரார் அழிவர், திறம்பட ஞானம் சேர வொட்டாதே** என்பது திருமந்திரம்.

உடலைப் போணாது உயிர் செயல்பட இயலாது உடலின் தன்மைக்குத் தக்கவாறே அறிவும், ஆன்மாவும் புத்துணர்ச்சிப் பெறுகின்றன. வரையறையற்ற உணவுன்போர் உடல் நோய்க்கு ஆளாவதோடு, மனநலமும் இன்றித் துயருறுவதை நாம் காணலாம். இதனையே வள்ளுவரும்,

'மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றமை போற்றி யுணின்'

எனவும் உணவினை மருந்தாக்கிக் கொள்வர்.

'அற்றலளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்குமாறு'

எனவும், இவற்றிலிருந்து உடலுக்கும், மனத்திற்கும் வரையறுக்கப்பட்ட உணவு இன்றியமையாததொன்று என்பது தெளிவாகின்றது. இவ்வுணவினைக் கூட்டியும், குறைத்தும்

மாற்றியும் உடல்நலத்தை நல்லமுறையில் வைத்துக்கொள்ள இயலும் என்பதை அறியலாம். மேலும், உணவால் பக்குவப் படுத்தப்பட்ட உடலையும், மனத்தையும் ஒருமுகப்படுத்துதலும் இறைவனை நாம் சிந்திப்பதற்கு உரிய சாதனங்களாகும்.

இறைவனின் சிந்தனையால் மனத்தையும், உடலையும் ஒருமுகப்படுத்தி மனநலம் பேணும் திறத்தினை நம் முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ளனார். அந்நிலைக்கு விரதம் என்று பெயர். விரதமிருப்பது என்பது மன உறுதியை பேணுதலாகும். உடலையும், மனத்தையும் ஒருநிலைப்படுத்தி வாழ்க்கையை வளம்பெறச் செய்யும் இம்முறை பழங்காலத்திலிருந்தே பழக்கத்தில் இருந்துவருகிறது.

இந்து சமயத்தில் சைவம், வைணவம், கௌமாரம், சாக்தம், காணாபத்தியம், சௌரம் என ஆறுவகைப் பிரிவுகளைக் கூறுவர். இவ்வாறு பிரிவுகளிலும் பலவகைப்பட்ட தேவதைகளை வழிபடும் வழக்கத்தை ஆதிசங்கரர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இதனால் இவருக்கு **'ஷண்மத ஸ்தாபகர்'** என்ற பெயருமுண்டு. இத்தகைய பிரிவுகளில் ஒவ்வொரு தெய்வத்தின் பெயராலும் 'விரதம் காக்கும்' முறைகளும் உண்டு. இத்தகைய விரதங்களில் **'விரதமஹிமா'** என்ற இந்நூல், புராண வாயிலாக எழுந்தவைகள்தான் இந்த விரதங்களின் கதைகளாகும். ஸ்ரீவேதவியாச மகரிஷியால் ஸ்காந்த புராணத்திலடங்கிய விசேஷமான இதிகாசாதி விரத கதைகளையும், சௌனகாதி மஹரிஷிகளுக்கு, ஸ்ரீமத் சூதமுனிவரால் உபதேசிக்கப்பட்ட புண்ணிய விரத கதைகளில் தற்போது விநாயகர், சரஸ்வதி, கேதாரகௌரீ, வரலக்ஷ்மீ, திருமால் ஆகியோரை நினைந்து செய்யப்படும் விரதமுறைகள் மட்டும் சொல்லப்பட்டிருக் கின்றன.

**ஆசிரியர் வரலாறு :** இந்நூலாசிரியர் கள்ளப்புலியூர் என்னும் ஊரினர். ஆசாரிகளின் குருவாக (புரோகிதராக) இருந்தவர் என்பதும். இவர் எழுதிய அருணாசலேசர்மீது

வண்ணம் மற்றும் தாது வருஷத்து கரிப்பு கும்மியும் என்ற நூலிலிருந்து அறியமுடிகிறது. இவருடைய இயற்பெயர் பர்வதசஞ்ஜீவி என்பது. இவர் இதனை தமிழில் மலைமருந்தன் என்று மாற்றி வைத்துக்கொண்டுள்ளார். என்பதும் குறிப்பிடத் தக்கது. இவர் இந்நூலில் விரதங்களின் கதைகளை வடமொழியினின்றும். தமிழில் மொழிபெயர்த்து எல்லோரும் சுலபமாய்த் தெரிந்துகொள்ள உத்தேசித்து வசன ரூபமாய் எழுதியுள்ளார். விநாயக விரத கதைக்கும், சரஸ்வதி விரத கதைக்கும் வடமொழி ஸ்லோகமும், வசனமும் கலந்தும் கேதார கௌரீ விரதம், வரலக்ஷ்மி விரதம், அனந்த விரதம், சிலுக்கதுவாதசி விரதம் முதலிய விரத கதைகளுக்கு வசனம் மட்டும் எழுதியுள்ளார். இந்நூலாசிரியர் சுவடியில் தமிழும், கிரந்தமும் கலந்து மணிப்பிரவாள நடையில் எழுதியுள்ளார். இந்த நூலில் காணப்படும் கதைகள் பூஜைகளின் ஒரு அங்கமே.

இந்த விரத மகிமையைப் படிக்கும் நேயர்களுக்கு முறைப்படி அந்தந்த தேவதைகளுக்குப் பூஜை செய்து அர்ச்சனையும் செய்யவேண்டும் என்ற அவா ஏற்படும் என்பது தெரியும். ஆனால் இந்த சுவடியில் பூஜை செய்யும் முறை சொல்லப்படாமையால் அதை விடுத்து அர்ச்சனை செய்யும் நாமாவளியை மாத்திரம் வடமொழியிலும், தமிழிலும் அச்சிட்டுள்ளோம்.

**சுவடியின் வரலாறு** இவருடைய கைப்பட எழுதிய பல சுவடிகள் இந்நூலகத்தில் இருக்கின்றன. சில சுவடிகள் வடமொழிப் பிரிவில் விழுப்புரம் முத்துகொண்டாளியாரின் தொகுதியிலும், சில சுவடிகள் தமிழ்ப் பிரிவிலும் பாதுகாக்கப்படுகின்றன. இந்த சுவடிகளை 1975-76ஆம் ஆண்டுகளில் நூலகத்தில் ஆக்கம் செய்துள்ளனர். இச்சுவடி விழுப்புரம் முத்துக்கொண்டாளியாரின் தொகுயில் வடமொழிப் பிரிவில் சுவடி எண். 1305-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**நூலின் காலம்**

**விநாயகரின் விரத கதை** : துன்முகி வருஷம், கார்த்திகை மாதம் 18ந் தேதி மங்களவாரம் மத்தியானத்தில் பர்வத சஞ்ஜீவி அய்யர் ஹஸ்தத்தால் எழுதி ஸமாப்தி ஆயிற்று. 1-12-1301.

**சரஸ்வதி விரத கதை** : துன்முகி நாம சம்வத்சரம் கார்த்திகை மாதம் 18-ந் தேதி மங்களவாரத்தில் கள்ளப்புலியூர் பர்வத சஞ்ஜீவி அய்யரால் எழுதி சமாப்தியாயிற்று. 1-12-1801.

**சரஸ்வதி விரத கதை வசனம்** : ஹேவிளம்பி வருஷம், புரட்டாசி மாதம் 14-ந் தேதி, குருவாரம், பூர்வபக்ஷம், சதுர்த்தி திதி, விசாக நட்சத்திரம், ப்ரிதி நாம யோகம், பத்ரவாகரணம் இவைகள் கூடின சுபதினத்தில் பகல் 10 நாழிகைக்கு விருச்சிக லக்னத்தில் ஸ்ரீமத் பர்வத சஞ்ஜீவி சுவாமிகள் ஹஸ்தத்தால் எழுதி ஸமாப்தி ஆயிற்று. (28-9-1837)

**கேதார விரத கதா சங்கிரகம்** : இந்த கதா புஸ்த்தகம் ஜய வருஷம், புரட்டாசி மாதம் 28-ந் தேதி குருவாரத்தில் பர்வத சஞ்ஜீவி அய்யர் கையால் எழுதி முடிந்தது. 14-9-1854.

இந்நூலாசிரியர் எழுதியுள்ள சில கதைகளில் குறிப்பிட்டுள்ள கால அளவைக் கொண்டு 1800-ஆம் ஆண்டில் இந்நூலை எழுதியிருக்கிறார் என்று அறியமுடிகிறது.

**நன்றியுரை** : இந்நூலைப் பதிப்பிக்கும் பணியை எனக்கு நல்கிய இந்த நூலக இயக்குநரும் மாவட்ட ஆட்சியருமான திரு. தேவஜோதி ஜெகராஜன், இ.ஆ.ப., அவர்களுக்கும், இந்நூலக நிர்வாக அலுவலர் திரு R.கோபால் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் நிர்வாக அலுவலர் (பொறுப்பு) சரஸ்வதி மகால் நூலகம் அவர்களுக்கும், இந்நூலக பதிப்பீட்டு மேலாளர் மற்றும் நூலகர் திரு. அ. பஞ்சநாதன், எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்.,

அவர்களுக்கும் இந்நூல் சீரிய பதிப்பாக வெளிவர எனக்குப் பலவகையிலும் உதவிபுரிந்த மூதறிஞர் ப்ரம்மஸ்ரீ தேதியூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துககொள்கிறேன். இதனை சிறந்த முறையில் அச்சிட்ட லக்ஷ்மி அச்சகத்தார் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்,

எஸ். இராஜலக்ஷ்மி,
சம்ஸ்கிருதப் பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
8-10-95

## கதைகளின் சுருக்கம்

**1. விநாயக விரதம்**

சுப்ரமணியருக்கு ஈச்வரன் சொன்னது. அதை சூதரிஷியானவர் தர்மராஜாவுக்குச் சொன்னார்.

**2. சரஸ்வதி விரதம்**

சுகேது மஹாராஜனுக்கு ஆங்கிரஸ முனிவர் சொன்னார். அதில் சுகேது மஹாராஜன் சரித்திரம் சொல்லப்பட்டுள்ளது.

**3. கேதார விரதம்**

சூத ரிஷியானவர் நைமிசாரண்ய ரிஷிகளுக்குச் சொன்னார். அதில் ஈஸ்வரியானவள் சிவன் சரீரத்தில் சேர்ந்த கதையையும், ஒரு ராஜாவின் குமாரத்திகளான புண்யவதீ, பாக்யவதீ இவர்களின் கதையும் சொல்லப்பட்டுள்ளது.

**4. வரலக்ஷ்மி விரதம்**

ஈஸ்வரரானவர் ஈஸ்வரிக்குச் சொன்னது. அதில் சாருமதியின் ஸ்வப்னத்தில் லக்ஷ்மி போய் அவளுக்கு வரம் கொடுத்த கதை சொல்லப்பட்டுள்ளது.

**5. அனந்த விரதம்**

கிருஷ்ணரானவர் தர்மராஜாவுக்குச் சொன்னார். அதில் கௌண்டின்ய ரிஷியின் சரித்திரம் சொல்லப்பட்டுள்ளது.

**6. சிலுக்க த்வாதசி விரதம்**

கிருஷ்ணருக்கு நாரதரிஷி சொன்னது. அதில் ஒரு ஸ்திரியானவள் புழுவாய்ப் பிறந்து லக்ஷ்மி சொன்னபடி நோன்பெடுத்து மோக்ஷம் அடைந்த கதை சொல்லப்பட்டுள்ளது.

உ

ஸ்ரீ மஹாகணபதயே நம:

# விரதமஹிமா

## 1. விநாயக விரத கதையின் சுருக்கம்

தர்மராஜாவானவர் (தருமபுத்ரர்) சூதாடி நாடிழந்து தம்பிமார் சஹிதமாய் வனவாசம் செய்யும்போது அங்குள்ள சூத ரிஷியானவர், சுப்ரமண்யருக்குப் பரமசிவன் உபதேசித்த விநாயக விரதத்தைச் சொல்லி, இதை நீ செய்தால் சுகப்படுவாயென்றும் இதற்குத் திருஷ்டாந்தமும் கூறினார்.

திருஷ்டாந்தம்[1] : இந்த விரதத்தை தமயந்தி, கிருஷ்ணர், தேவேந்திரன், ராமர், பகீரதன், தேவர்கள், ராக்ஷசர்கள் ஆகிய இவர்களெல்லாம் அனுஷ்டித்து நினைத்த கார்யம் சித்தியாகி சுகமடைந்தார்களென்றும் சொன்னார். தர்மராஜாவானவர் அதைக்கேட்டு தன் தம்பிமார் சஹிதமாய் இந்த விநாயக விரதத்தை அனுஷ்டித்து இதன் பலத்தால் துரியோதனன் முதலான சத்ருக்களை சம்ஹாரம் செய்துவிட்டு ராஜ்யபாரம் செய்து சுகமாய் வாழ்ந்திருந்தார்.

## 2. சரஸ்வதி விரத கதையின் சுருக்கம்

சூத ரிஷியானவர் சௌனகாதி ரிஷிகளுக்குச் சொல்லுகிறார். அது எப்படி என்றால், ஆஸ்விஜ[2] மாசத்தில் வரப்பட்ட சுக்லபக்ஷ நவமியில், சரஸ்வதியை மந்திர விதிப்படி பூஜை செய்தால் சகல கார்யமும் சித்தியாகி, சம்பத்துடனிருந்து அந்தியத்தில் துர்காலோகம் அடைவார்கள். அப்படி அடைந்தவர் யாரென்றால் - கிருத யுகத்திலே சுகேது மஹாராஜான் என்று ஒருவன் அரசு செய்திருந்தான். அப்படி இருக்கும்போது அவனுக்குத் தன் பங்காளிகளால் விரோதம் நேரிட்டது. அவன் சைன்யத்துடன் போய் அவர்களுடன் சண்டை செய்து தோற்று அவர்கள் விட்ட பாணத்தால்

அடிபட்டு பயந்து காட்டிற்கு ஓடிப்போனான். அதை அவன பார்யாளான சுவேதி என்பவள் தெரிந்து புறப்பட்டு அவனுடன் கூடப்போய் சேர்ந்தாள். அந்த இருவரும் காட்டில் போஜனம் இல்லாமல் பசியால் பாதைப்பட்டு அவன் நடக்க சக்தியற்றான் (ற்றவனாயினான்). அப்போது அவள் தன் புருஷனைத் தோள்மேல் எடுத்துக்கொண்டு அந்த வனத்தில் சஞ்சரித்திருந்தாள். அப்போது ஆங்கிரஸ முனிவரானவர் அந்த இடத்திற்குப்போய் அவர்களுக்கு நேரிட்ட சங்கடங்களை விசாரித்து அவர்களுக்கு சரஸ்வதீ விரதத்தைச் சொல்லி அவர்களைப் பஞ்சவடியில் (அழைத்துக்) கொண்டு போய் சரஸ்வதீ விரதத்தை அவர்களைக் கொண்டு செய்வித்து. அவர்களைத் தன்னுடைய ஆச்ரமத்திற்கு அழைத்துக் கொண்டுபோனார். அந்த சரஸ்வதீ விரத பலத்தால் அந்த சுகேதுராஜனுக்குப் பிள்ளை பிறந்தது. அந்தப் பிள்ளை வளர்ந்து தன் தேசத்தில்போய் தன் பங்காளிகளை ஜயித்து, ராஜ்யபாரம் செய்திருந்தது. அந்தப் பிள்ளையின் பெயர் சூர்யபிரதாபன். பிள்ளையின் தாய்-தகப்பன் இருவரும் அந்த சரஸ்வதீ விரத பலத்தால் சுகமுடன் வாழ்ந்திருந்து அந்த்யத்தில் சுவர்க்கலோகம் அடைந்தார்கள்.

### 3. கிருஷ்ணர் ஸ்யமந்தகமணியை அடைந்த கதையின் சுருக்கம்[3]

சத்ராஜித ராஜவானவன் சூரியனைக் குறித்து தபசு செய்தான். சூரியன் அவனுக்குச் சமந்தகமணி என்கிற ரத்னத்தைக் கொடுக்க, அதை ஸத்ராஜிதன் தரித்துக்கொண்டு துவாரகைக்குப்போய் கிருஷ்ணரைத் தரிசித்தான். அவர் அந்த ரத்னத்தைக் கேட்க, அதை சத்ராஜிதன், கொடுக்கமாட்டேன் என்று தன் ஊருக்குப் போனான்.

பின், சில நாட்கள் பொறுத்து இந்த ரத்னத்தை அந்த சத்ராஜிதனின் தம்பியானவன் தரித்துக்கொண்டு காட்டிற்கு வேட்டையாடப் போனான். அங்கே ஒரு சிம்ஹம் வந்து அவனைக் கொன்றுவிட்டு அந்த ரத்னத்தை எடுத்துக்கொண்டு

நடந்தது. அப்போது கரடிகளுக்கு ராஜாவான ஜாம்பவந்தன் வந்து சிம்ஹத்தைக் கொன்றது. அந்த ரத்னத்தை எடுத்துக் கொண்டு தன் குகைக்குப் போயிற்று. கிருஷ்ணரானவர் விநாயக விரதத்தை அனுஷ்டித்த பலத்தால் அந்த குகைக்குப் போனார். அவருக்கு அந்த ஜாம்பவந்தன் ஸ்யமந்தகமணியையும், தன் குமாரத்தியாகிய ஜாம்பவதியையும் கொடுக்க, ஜாம்பவதியை விவாஹம் செய்துகொண்டுவந்து அந்த ஸ்யமந்தகமணியை மேற்படி சத்ராஜிதனுக்குக் கொடுக்க அவன் தன் குமாரியாகிய சத்யபாமாவை கிருஷ்ணருக்குக் கொடுத்தான்.

### 4. சதுர்த்தி விநாயக விரத கதை

முன்காலத்திலே குரு தேசத்திலே ஹஸ்திநாபுரி பட்டனத்திலே சந்திர வம்சத்தில் பிறந்த ராஜ வம்சத்திலே தர்மராஜா என்று ஒருவர் இருந்தார். அவர் தன் தாயாதியான' துரியோதனனால் ராஜ்யம் இழந்து தன் சகோதரர் களையும், திரௌபதியையும் இட்டுக்கொண்டு' வனத்தில் போய் அநேக ரிஷி ஆச்ரமங்களில்போய் அவர்களைத் தரிசனம் செய்து, பின்பு சூதமஹரிஷியின் ஆச்ரமத்தில்போய் அந்த ரிஷீச்வரரை நமஸ்காரம் செய்து அவர் முகத்தைப் பார்த்துச் சொல்லுகிறார்.

'கேளுங்கள், சர்வசாஸ்திர விசக்ஷணராகிய' சூத மஹரிஷியே ! நாங்கள், எங்கள் தாயாதிகளால் அதிக துன்பத்தை அடைந்து, ராஜ்யத்தையும் இழந்து வனத்தில் வந்து வாசம் செய்கிறோம். இப்போது உம்முடைய தரிசனத்தினால் எங்களுடைய சமஸ்த' துக்கங்களும் போயிற்று. எங்கள்மேல் தேவரீர் கிருபை செய்து, எங்களுக்கு ராஜ்யம் சித்திகும்படியாய் ஒரு விரதத்தை அனுக்ரஹம் செய்ய வேண்டியது' என்று தர்மராஜா கேட்க, சூத மஹரிஷி சொல்லுகிறார்.

'கேளுங்கள் பாண்டவர்களே ! மனுஷ்யர்களுக்கு சகல ஸம்பத்துக்களையும் சகல செளக்யங்களையும் கொடுக்கப் பட்டதாயும். விரதத்தில் உத்தமமான விரதமாயும், சகல பாபங்களையும் நாசம் செய்வதாயும், புத்ர-பௌத்ர விருத்தி செய்வதாயும், ரஹஸ்யமானதாயுமாகிய இப்பேர்ப்பட்டதான ஒரு விரதம் உண்டு. அதற்குப் பெயர் **விநாயக விரதம்**. அது முன்காலத்தில் சுப்ரமண்யருக்குப் பரமேச்வரன் உபதேசம் செய்தது. அது எப்படியென்றால் பிரமதாதி[8] கணங்களால் சேவிக்கப்பட்டதாயும், அநேக ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டதாயுமாகிய ஸ்ரீ கைலாசகிரியின் சிகரத்திலே, மந்தார விருக்ஷத்தின்[9] கீழே ரத்ன சிம்மாஸனத்தின் மேலே ஸ்ரீ பரமேச்வரரானவர் வீற்றிருந்தார். அப்போது, சுப்ரமண்ய ரானவர் அதிக சந்தோஷத்தை அடைந்து, சுவாமியைப் பார்த்துக் கேட்கிறார். ஸ்ரீ மஹாதேவராயும், பகவந்தரா[10] (பகவானா)யுமுள்ள சாம்பசிவமூர்த்தியே, மனுஷ்யர்களான வர்கள் எந்த விரதத்தினால் செளபாக்கியங்களையும், சுகங்களையும், புத்ர சம்பத்துக்களையும் அனுபவிக்கிறார்கள் (களோ) அப்பேர்ப்பட்ட உத்தம விரதத்தை எனக்கு தேவரீர் அனுக்ரஹம் செய்யவேண்டும் என்று கேட்க, ஈச்வரன் சொல்கிறார்.

கேளாய் ஓ குமாரா ! ஸர்வ சம்பத்பிரதமாயும்[11] உத்தமமானதாயும், தீர்க்காயுசும், காம்யமும்[12] கொடுக்கிறதாயும் ஆகிய **விநாயக விரதம்** என்று ஒரு விரதமுண்டு. அது எப்போது செய்கிறதென்றால் சாந்தரமான[13] ரீதிப்படி வருகிற பாத்ரபத மாசத்திலே சுக்லபக்ஷத்திலே, சதுர்த்தியிலே செய்ய வேண்டும். அது எப்படியென்றால் முன்சொன்ன திதி, தினத்தில் சூரியோதயத்தில் ஸ்நானம் செய்து, பரிசுத்தமான வஸ்திரம் தரித்து, நித்ய கர்மானுஷ்டானம் செய்து, அவரவர்கள் சக்திக்குத் தகுந்தபடி தனலோபத்துவம்[14] இல்லாமல் பொன்னினாலாவது, வெள்ளியினாலாவது விக்னேச்வரன் செய்யவேண்டும். இவை இரண்டிலும் செய்ய சக்தியில்லாவிட்டால் பரிசுத்தமான[15] மண்ணினால் விக்னேச்வரன் செய்து தன் வீட்டுக்கு வடக்கே ஒரு

மண்டபம் செய்து, அதில் நெல்லாவது, பச்சரிசியாவது போட்டு, பரப்பி, அதில் அஷ்டதளம்[16] போட்டு அதன்மேல் முன்செய்த விக்னேச்வரரை வைத்து வெள்ளையான கந்தாக்ஷதைகளாலும்[17], வெள்ளெருக்காலும் பக்தியுடன் பூஜை செய்து, தூப-தீபம் காண்பித்து, நெய்யில் செய்த கொழுக்கட்டைகள் முதலான மாவு பலகாரமும், தேங்காய், வாழைப்பழம், நாக(வ)ல் பழம், விளாம்பழம், கரும்புத்துண்டு இதுமுதலான வஸ்துக்களை[18] தினுசுக்கு[19] இருபத்தொரு விழுக்காடு வெவ்வேறாக வைத்து நைவேத்யம் செய்து, ந்ருத்த[20]-கீத-வாத்யமும், புராண படனமும் செய்வித்து, கணபதி பூஜையை நிறைவேற்றிப் பின்பு; வேத விதியறிந்த பிராம்மணர்களுக்கு தக்ஷிணை, தாம்பூலம் கொடுத்து, எண்ணெயில் செய்த பலகாரங்களை நீக்கி, நெய்யில் செய்த பலகாரத்துடன் பந்துக்கள் சகிதமாய் பேஜனம் செய்ய வேண்டியது. இந்த பிரகாரமாய் எவர் கணபதி பூஜை செய்கிறார்களோ, அவர்களுக்குக் கணபதியின் அனுக்கிரஹத்தால் சகல கார்யமும் ஸித்திக்கும். இதற்கு எள்ளளவும் சம்சயமில்லை. மறுநாள் உதயத்தில் ஸ்நானம் செய்து கணபதிக்கு புன:பூஜை[21] செய்து, மௌஞ்ஜீ[22], கிருஷ்ணாஜினம்[23], தண்டம்[24], யக்ஞோபவீதம்[25], கமண்டலம்[26], வஸ்திரம் இவைகளை அவரவர்கள் சக்திக்குத் தகுந்த மாத்ரம் கணபதிக்குச் சமர்ப்பித்து, பின்பு அவைகளை பிரும்மச்சாரிக்குத் தானம் செய்து, முன்னே குருவுக்கும் அப்பால் பிராம்மணர்களுக்கும் வஸ்திரம், மாலை, தக்ஷிணை, தாம்பூலம் இவைகளைக் கொடுத்து போஜனம் செய்வித்து திருப்தி செய்யவேண்டியது.

கேளாய், ஷண்முகா! மூன்று லோகங்களிலும் பிரசித்தமான இந்த கணபதி விரதத்தை (தம்) முன் காலத்தில் தேவர்கள், முனிகள், கந்தர்வர்கள், கின்னரர்கள் இவர்களால் அனுஷ்டிக்கப்பட்டதே அல்லாமல் சாமான்யமல்ல என்று இந்தப் பிரகாரமாக பரமேச்வரரானவர், சுப்ரமண்யருக்கு உபதேசம் செய்தார். ஆகையால், ஓ தர்மராஜனே ! நீ இந்த விரதத்தை அனுஷ்டித்தால் நீ சத்ருவை ஜயித்து,

சௌக்கியத்தை அடைவாய். நான் உனக்கு சத்தியமாய்ச் சொன்னேன். இதற்குத் திருஷ்டாந்தம்[27] செல்கிறேன்.

முன் காலத்திலே விதர்ப்ப தேசத்திலே பீமராஜனின் குமாரியான தமயந்தியானவள் இந்த விநாயக விரதத்தை அனுஷ்டித்து இதன் பலத்தால் நிஷத தேசத்து ராஜாவான நள மஹாராஜனை விவாஹம் செய்துகொண்டாள்.

ஸ்ரீ கிருஷ்ண ஸ்வாமியானவர் இந்த விரதத்தை அனுஷ்டித்து, ஜாம்பவதியையும், ஸ்யமந்தக என்ற ரத்னத்தையும் அடைந்தார். அது எப்படி என்றால் :

சத்ராஜித்(தன்) என்கிற ராஜவானவன் சூரியனைக் குறித்து தபசு செய்து, சூரியன்வந்து தோன்றி தனக்குக் கொடுத்த சமந்தகம் (ஸ்யமந்தகம்) என்கிற ரத்னத்தை மார்பில் தரித்துக்கொண்டு துவாரகைக்குப்போய் கிருஷ்ணரைத் தரிசித்தான். அவர் அந்த ரத்னத்தைப் பார்த்துக் கேட்க[28], அதை அவன் கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டுத் தன் ஊருக்குப் போனான். பின், சில நாள் பொறுத்து அந்த ரத்னத்தை அவன் தம்பியானவன் (பிரசேனன்) தரித்துக் கொண்டு காட்டில்போய் வேட்டையாடினான். அப்போது அங்கே ஒரு சிம்ஹம் வந்து அவனைக் கொன்றுவிட்டு, அந்த ரத்னத்தை எடுத்துக்கொண்டு நடந்தது. அப்போது கரடிகளுக்கு ராஜாவான ஜாம்பவந்தன் வந்து அந்த சிம்ஹத்தைக் கொன்றுவிட்டு அந்த ரத்னத்தை எடுத்துக்கொண்டு தன் குகைக்குப் போச்சு(து). பின்பு சில நாட்கள் பொறுத்து கிருஷ்ணரானவர்[29] விநாயக விரதத்தை அனுஷ்டித்த பலத்தால் அந்த குகைக்குப்போய் ஜாம்பவந்தனைக் கண்டு பேசினார். அப்போது அவன் அந்த ஸ்யமந்தகமணியையும், தன் குமாரத்தியான ஜாம்பவதியையும் கொடுக்க, அவர் அதைப் பெற்றுக்கொண்டு துவாரகாபுரிக்கு வந்து ஜாம்பவதியை விவாஹம் செய்துகொண்டுவந்து அந்த ஸ்யமந்தகமணியை சத்ராஜிதனுக்குக் கொடுக்க, அவன் தன் குமாரியான சத்யபாமாவை கிருஷ்ணருக்குக் கொடுத்தான்.

பின்பு கிருஷ்ணரானவர் சத்யபாமாவை விவாகம் செய்துகொண்டார்.

அப்போது உலகத்தார் 'கிருஷ்ணரானவர், சத்ராஜிதன் தம்பியைக் கொன்றுவிட்டு, அவன் தரித்திருந்த ஸ்யமந்தக மணியை அபகரித்தார்' என்று சொன்னார்கள். கிருஷ்ணரானவர் தன்னை உலகத்தார் சொல்லுகிற அபவாத தோஷத்தைக் குறித்து சுக்லபக்ஷ (வளர்பிறை) சதுர்த்தியில் பால் குடத்தில் சந்திரனைப் பார்த்தவர்களுக்குச் சம்பவிக்கும் அபவாதம், எனக்குச் சித்தித்ததே என்று பலபத்ரருடன் (பலராமனிடம்) சொல்ல, அதற்கு அவர் சதுர்த்தி சந்திரனுக்கு விநாயகர் எப்படி சாபம் கொடுத்தார் என்று கேட்க, கிருஷ்ணர் சொல்லுகிறார்.

## விநாயகர், சந்திரனுக்குச் சாபம் கொடுத்த வரலாறு

கேளும் அண்ணா ! முன்னாளில் ஒருநாள் விக்னேச்வரரானவர் குஞ்சர[30] சரீரத்துடன் கைலாசத்திற்குப் போனார். அவரைச் சந்திரன் பார்த்துச் சிரிக்க, விநாயகரானவர் சந்திரனைப் பார்த்து, "உன்னை சதுர்த்தியில் யார் பால் குடத்தில் யார் பார்க்கிறார்களோ, அவர்களுக்கு அபவாத தோஷம் சித்திக்கக்கடவது" என்று சாபம் கொடுத்தார். அப்போது சந்திரனானவன் வணக்கமாய் விநாயகரைப் பார்த்து, ஈச்வரரானவர் சுப்ரமண்யருக்குச் சொன்ன பிரகாரம் என்னை பாத்ரபத சுத்த (வளர்பிறை) சதுர்த்தியில் விதிப்படி பூஜைசெய்து விரதத்தை அனுஷ்டித்தவர்களுக்கு சம்பவிக்கும் அபவாததோஷம் நீங்கி, சத்ருஜயம், மோக்ஷ சாம்ராஜ்யம், சித்தி, தன, கனக, வஸ்து, வாஹநம், அநேக வஸ்த்ராபரண, புத்ரபௌத்ர கோமஹிஷ்யாபி விருத்தி ஆகிய இவைகளை எல்லாம் உண்டானதுபோல், உனக்கும் உண்டாகுமென்று விநாயகருக்குச் சொன்னார். அவர் சொன்னபடிக்கு இந்த விரதத்தை சந்திரன் முதலானவர் அனுஷ்டித்தார்கள். கிருஷ்ணரானவர் இந்த விரதத்தை அனுஷ்டிக்க வேணும் என்று பலபத்ரரிடம் சொல்ல, பலபத்ரரானவர் தன்

பட்டணத்தில் எல்லோரையும் விநாயக விரதம் செய்யுங்கள் என்று தண்டோரா மூலமாய் தெரிவித்து அவரும் கிருஷ்ணர் முதலானவர்களும் இந்த விநாயக விரதத்தைச் செய்தார்கள். பின்பு கிருஷ்ணரானவர் விநாயகரின் அனுக்கிரஹத்தால் முன்சொன்ன ஜாம்பவந்தர் இருக்கிற குகைக்குப்போக, ஜாம்பவந்தரானவர் முன்சொன்ன சியமந்தகமணியையும், தன் குமாரியான ஜாம்பவதியையும் கிருஷ்ணருக்குக் கொடுத்தார்.. கிருஷ்ணரானவர் அந்த ரத்னத்தைக் கொண்டுவந்து முன்சொன்ன சத்ராஜித்த மஹாராஜனுக்குக் கொடுக்க, அவன் அதை வாங்கிக்கொண்டு, தன் குமாரத்தியான சத்யபாமாவைக் கிருஷ்ணருக்குக் கொடுத்தான்." அவர் ஜாம்பவதியையும் சத்யபாமாவையும் விவாஹம் செய்துகொண்டார்.

இதுதவிர தேவேந்திரனானவன் விருத்ராசுரனை வதம் செய்யப்போகிறபோதும், ஸ்ரீராமரானவர் சீதையைத் தேட ஆரம்பிக்கறபோதும், பகீரதனானவன் கங்கையைப் பூமியில் கொண்டுவர (தேவலோகத்துக்குப்போனபோதும்) முயன்ற போதும் தேவர்கள் (ராக்ஷஸர்களும்) அசுரர்களும் திருப்பாற்கடல் கடைய ஆரம்பிக்கிறபோதும், சாம்பன் என்கிறவன் தனக்கு வந்த குஷ்ட வியாதி நிவர்த்தியாகிறதற் காகவும் ஆகிய இவர்களெல்லாம் கணபதி பூஜை செய்தார்கள் என்று இந்தப் பிரகாரம் சூதமஹரிஷியானவர் தர்மராஜனுக்குச் சொல்ல, தர்மராஜனானவர் தன் தம்பிமார் சஹிதமாய் இந்த விரதத்தை அனுஷ்டித்து இந்த விரத பலத்தால் தன் சத்ருவான துரியோதனன் முதலானவர்களை சம்ஹாரம் செய்து ராஜ்யத்தை அடைந்தார். யாவரும் மனதில் நினைத்த கார்யங்களெல்லாம் விநாயக பூஜையின் பலத்தால் அவர்களுக்கு சித்தியாகிறது. ஆகையால் கணபதியானவர் சித்தி விநாயகர் என்று லோகத்தில் பெயர் பெற்றார். அதில் அந்த விநாயகரை வித்யாரம்ப காலத்தில் பூஜை செய்தால், வித்யையில் தேர்ச்சி கிடைக்கும், இதுதவிர ஜயம் விரும்புகிற வர்கள் ஜயமும், புத்திரனை விரும்புகிறவர்களுக்கு புத்திரரும், புருஷனை விரும்புகிறவர்களுக்கு புருஷனும், சௌபாக்யத் தைக்கோரின சுமங்கலிகளுக்குச் சௌபாக்யமும், ஆக

இப்படியுண்டாகும். விக்னேச்வரரை விதவை ஸ்திரீகள் பூஜை செய்தால் மறுஜன்மங்களில் விதவையாகமாட்டார்கள். ஆகையால் பிராம்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைஸ்யாள், ஸ்திரிகள், பாலர்கள் (குழந்தைகள்) இவர்களெல்லாம் யதா விதிப்படிக்கு பய பக்தியுடன் இந்த விரதத்தை அனுஷ்டித்தால் ஸ்ரீகணபதியின் அனுக்கிரஹத்தில் சகல கார்யமும் சித்திக்கும். புத்ர, பௌத்ர அபிவிருத்தியும், அதிக சம்பத்தும் அடைந்து சுகமாய் இருப்பார்கள்.

இந்தக்கதை ஸ்காந்த புராணத்தில் சொல்லப்படுகிறது. விநாயக விரத கதை சம்பூர்ணம்.

இதன்படி வசனம் செய்தவர்கள் கள்ளப்புலியூர் பர்வத சஞ்ஜீவி அய்யர். இந்நூல் தை மாதம், விளம்பி வருஷம், ஆவணி மாதம் 8ந்தேதி சோமவாரத்தில் எழுதி நிறைவேறிற்று. (22-8-1898)

आसीत्पुराचन्द्रवंशे राजा धर्म इतिश्रुतः ।
स्वराज्ये दैवयोगेन ज्ञातिभिः कुटिलैः कृते ।।

अनुजैर्भार्यया सार्धं जगाम गहनं वनम् ।
बहुवृक्षसमाकीर्णं नानामृगसमन्वितम् ।।

बहुपक्षिकुलोपेतं व्याघ्रभल्लूकसेवितम् ।
तत्र तत्र समाविष्टा मुनयो ब्रह्मवादिनः ।।

आदित्यसन्निभाः सर्वे सर्वे वह्निसमप्रभाः ।
तेजोमण्डलसंकाशा वायुपर्णाम्बुभक्षकाः ।।

अग्निहोत्ररता नित्यमतिथीनां च पूजकाः ।
ऊर्ध्वबाहुनिरालम्बाः सर्वे मुनिगणास्तथा ।।

तान् दृष्ट्वा धर्मराजोऽपि संभ्रमेण समन्वितः ।
सूताश्रमं समासाद्य सूतं दृष्ट्वा ससंभ्रमम् ।।
नत्वा च भार्यया सार्धमनुजैः समुपाविशत् ।।

टीका -

முன்காலத்திலே சந்திர வம்சத்தில் பிறந்த தர்மராஜா வானவர் தைவ வசத்தினால் தாயாதிகளான துர்யோதனாதியரின் சதியினால் ராஜ்யம் இழந்து தன் சகோதரர்களுடனும் த்ரௌபதியுடனும் அநேகமான விருக்ஷங்களும், கரடி, புலி முதலான அநேகவித மிருகங்களும், சக்ரவாகம் முதலான பலுவித பக்ஷிகளும் கூடியிருக்கிற வனத்தில்போய் அநேக ரிஷ்யாஸ்ரங்களில்போய் அவர்களைத் தரிசனம் செய்து கொண்டு பின்பு, ஸூதமஹரிஷி வசிக்கிற ஆச்ரமத்தில்போய் அந்த ரிஷீச்வரரை நமஸ்கரித்து அவரைப் பார்த்துச் சொல்லுகிறார்.

धर्मराज उवाच -

सूत सूरे महाप्राज्ञ सर्वशास्त्रविशारद ।
वयं च भार्यया सार्धं ज्ञातिभिः परिपीडिताः ।।

स्वराज्यं सकलं चैव पुत्राश्चापहृताहि नः ।
(पित्र्यं चापहृतं हि नः) ।

तव दर्शनमात्रेण सर्वं दुःखं विनाशितम् ।
ममोपरि कृपां कृत्वा व्रतं ब्रूहि दयानिधे ।।

टीका -

சர்வசாஸ்த்ர விசக்ஷணராயும், மஹா ப்ராக்ஞராயும் கிருபைக்கு சமுத்ரமாயும் ஆகிய சூத மஹரிஷியே ! நாங்கள் எங்கள் தாயாதிகளால் அதிக பாதையை அடைந்தோம். எங்களுடைய ராஜ்யங்களையும் (புத்ரரையும்), சம்பத்துக்களையும் தாயாதிகள் அபகரித்துக் கொண்டார்கள். நாங்கள் வனத்தில் வந்து வாஸம் செய்கிறோம். இப்பொழுது உம்முடைய தரிசனத்தால் எங்களுடைய சமஸ்த துக்கங்களும் போயிற்று. என்மேல் தேவரீர் தயவுசெய்து எங்களுக்கு ராஜ்யம் சித்திக்கும்படியாய் ஒரு விரதத்தை அனுக்கிரஹம் செய்யவேண்டியது என்று தர்மராஜாவானவர் கேட்க, சூத மகரிஷி சொல்லுகிறார்.

सूत उवाच -

व्रतं सम्पत्करं नृणां सर्वसौख्यप्रवर्द्धनम् ।
श्रुणुध्वं पाण्डवाः सर्वे व्रतानामुत्तमम् व्रतम् ।।

रहस्यं सर्वपापघ्नं पुत्रपौत्राभिवर्द्धमम् ।
व्रतं साम्बशिवेनैव स्कन्दस्योद्बोधितं पुरा ।।

टीका -

கேளுங்கள் பாண்டவர்களே ! மனுஷ்யர்களுக்கு சகல சம்பத்துக்களையும், சகல ஸௌக்யாபிவர்த்தனங்களையும் செய்வதாயும் விரதத்தில் உத்தமமானதாயும் சகல

பாபங்களையும் நாசம் செய்வதாயும், புத்ர-பௌத்ராபிவிருத்தி செய்வதாயும் ரஹஸ்யமானதாயுமாகிய ஒரு விரதம் உண்டு. அது முன் காலத்தில் சுப்ரமண்யருக்கு பரமேச்வரன் உபதேசித்ததாகும். அது எப்படி என்றால்

**कैलासशिखरे रम्ये नानागणनिषेविते ।**
**मन्दारविटपिप्रान्ते नानामणिविभूषिते ॥**

**हेमसिंह्मासनासीनं शङ्करं लोकशङ्करम् ।**
**पप्रच्छ षण्मुखस्तुष्टो लोकानुग्रहकाङ्क्षया ॥**

टीका -

ப்ரம்மாதி கணங்களால் சேவிக்கப்பட்டதாயும், அனேகமான ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டதாயும் ஆகிய கைலாச கிரியின் சிகரத்திலே மந்தார விருக்ஷத்தின் கீழே சிம்மாசனத்தில் ஸ்ரீ சாம்பசிவமூர்த்தியானவர் இந்த விநாயக விரதத்தைக் குமாரசுவாமிக்கு அனுக்ரஹித்து ஆரம்பிக்க, குமாரசாவாமியானவர் அதிக சந்தோஷத்தை அடைந்து, ஸ்வாமியைக் கேட்கிறார்.

स्कन्द उवाच -

**केन व्रतेन भगवन् सौभाग्यमतुलं भवेत् ।**
**पुत्रपौत्रधनं लब्ध्वा मनुजस्सुखमेधते ॥**

**तन्मे वद महादेव व्रतानामुत्तमं व्रतम् ।**

टीका -

ஸ்ரீமஹாதேவராயும் பகவானாயுமாகிய சாம்பசிவ மூர்த்தியே ! மனுஷ்யர்கள் எந்த விரதத்தினால் சௌபாக்யங் களையும், புத்ர சம்பத்துக்களையும் அடைந்து சுகத்தை அனுபவிக்கிறார்களோ அப்பேர்ப்பட்ட உத்தமமான விரதத்தை எனக்கு அனுக்கிரஹகிக்க வேண்டியதென்று கேட்க ஈச்வரன் சொல்லுகிறார்.

ईश्वर उवाच -

अस्ति व्रतं महाभाग गणनाथप्रपूजनम् ।
सर्वसम्पत्करं श्रेष्ठमायुष्कामार्थसिद्धिदम् ।।

मासे भाद्रपदे शुक्लचतुर्थ्यां व्रतमाचरेत् ।
प्रातःस्नात्वा शुचिर्भूत्वा नित्यकर्म समाचरेत् ।।

स्वशक्त्या गणनाथास्य स्वर्णरौप्यमयाकृतिम् ।
अथवा मृण्मयं कुर्याद् वित्तशाठ्यं न कारयेत् ।।

टीका -

குமார ! ஸர்வசம்பத்ப்ரதமாயும், உத்தமமானதாயும், தீர்க்காயசும், காம்யார்த்தமும் கொடுக்கிறதாயும் ஆகிய கணபதி விரதமென்று ஒரு விரதம் உண்டு. அந்த விரதம் பாத்ரபத மாசத்திலே சுக்லபக்ஷ சதுர்த்தி தினத்திலே ஆசரிக்க வேண்டியது. அந்த தினத்தில் செய்யவேண்டிய விதிகள் எது (என்ன) வென்றால், சூர்ய உதயத்தில் எழுந்து ஸ்நானம் செய்து சுத்தமான வஸ்த்திரம் தரித்து, நித்யகர்மானுஷ்டானம் செய்து அவரவர்கள் சக்திக்குத் தகுந்தபடிக்குத் தன லோப(த்துவம்) செய்யாமல் பொன்(னி)னாலாவது, வெள்ளி யாலாவது விக்னேச்வரனுடைய பிரதிமை செய்யவேண்டியது. இவை இரண்டினாலும் செய்ய சக்தியில்லாவிட்டால் பரிசுத்தமான மண்ணினாலாவது விக்னேச்வரனின் பிரதிமை செய்யவேண்டியது.

स्वगृहस्योत्तरे देशे मण्टपं कारयेत्ततः ।
तन्मध्येऽष्टदलं पद्मं यवैर्वा तण्डुलेन वा ।।

प्रतिमां तत्र संस्थाप्य पूजयित्वा प्रयत्नतः ।
श्वेतगन्धाक्षतैः पुष्पैर्दूर्वाङ्कुरसमन्वितैः ।

धूपैर्दीपैश्च नैवेद्यैर्मोदकैर्घृतपाचितैः ।
एकविंशतिसङ्ख्याकान् नारिकेलफलान्यपि ।।

रम्भाजम्बूकपित्थौघान् इक्षुखण्डांश्च तावतः ।
एवमन्यफलापूपैर्नैवेद्यं कारयेत्ततः ।।

नृत्तगीतैश्च वाद्यैश्च पुराणपठनादिभिः ।
तर्पयेद्गणनाथं च विप्रान् दानेन श्रोत्रियान् ।।

बन्धुभिः स्वजनैस्सार्धं भुञ्जीयात्तैलवर्जितम् ।
एवं य कुरुते मर्त्युः गणनाथप्रसादतः ।
सिध्यन्ति तस्य कार्याणि नात्रकार्या विचारणा ।।

टीका -

தன் வீட்டுக்கு வடக்கே ஒரு மண்டபம் செய்து, அதில் நெல்லாவது, பச்சரிசியாவது போட்டு பரப்பி, அதில் அஷ்டதளம் போட்டு, அதன்மேல் விக்னேச்வரரை வைத்து வெள்ளை(யாகிய) கந்தாக்ஷதைகளாலும் அறுகுகளாலும் (அருகம்புற்களாலும்) பக்தியுடன் பூஜை செய்து தூபதீபம் காண்பித்து நெய்யில் செய்த கொழுக்கட்டைகள் முதலான மாவுப்பலகாரமும் தேங்காய், வாழைப்பழம், நாவல்பழம், விளாம்பழம், கரும்புத்துண்டு இது முதலான பழங்களை வெவ்வேறாய் வகைக்கு 21 விழக்காடு வைத்து நைவேத்யம் செய்து, நிருத்த-கீத வாத்யமும் புராண படனமும் செய்வித்து கணபதி பூஜையை நிறைவேற்றி, பின்பு வேத விதியறிந்த பிராம்மணர்களுக்குத் தக்ஷிணை, தாம்பூலம் கொடுத்து, பந்துக்களுடன் எண்ணெயில் செய்த பலஹாரங்களை நீக்கி, நெய்யில் செய்த பலஹாரத்துடன் போஜனம் செய்ய வேண்டியது. இந்த பிரகாரமாய் எவன் கணபதி பூஜை செய்கிறானோ, அவனுக்கு கணபதியின் அனுக்கிரஹத்தால், சகல கார்யமும் சித்திக்கும். இதற்கு எள்ளளவும் சம்சயமில்லை.

ततः प्रभाते विमले पुनः पूजां समाचरेत् ।
मौञ्जीकृष्णाजिनं दण्डमुपवीतं कमण्डलुम् ।।

परिधानं तथा दद्याद्यथाविभवमुत्तमम् ।

उपायनं ततो दद्यादाचार्याय स्वशक्तितः ॥
अन्येभ्यो दक्षिणा दद्याद्ब्राह्मणान् भोजयेत्ततः ।

टीका -

மற்றாம் நாள் (மறுநாள்) உதயத்தில் ஸ்நானம் செய்து கணபதிக்கு புநபூஜை செய்து மௌஞ்ஜீ கிருஷ்ணஜிநம் - தண்டம்-யக்ஞோபவீதம், கமண்டலம் வஸ்த்ரம் இவைகளை அவர் அவர்கள் சக்திக்குத் தகுந்த மாத்ரம் (தகுந்தவாறு) கணபதிக்கு சமர்ப்பித்து அவைகளை பிரம்மச்சாரிகளுக்குத் தானம் செய்து முன்னே குருவுக்கும் அப்பால் பிராம்மணர் களுக்கும் வஸ்த்ரமால்யம்

त्रैलोक्ये विश्रुतं चैतद्व्रतानामुत्तमोत्तमम् ।
अन्यैश्च देवमुनिभिर्गन्धर्वैः किन्नरैस्तथा ॥

चीर्णमेतच्छ्रुतं सर्वैः पुराकल्पे षडानन ।
इति पुत्राय शर्वेण षण्मुखायोदितं पुरा ॥

एवं कुर्याद्धर्मराज गणनाथप्रपूजनम् ।
विजयस्ते भवेन्नित्यं सत्यं सत्यं वदाम्यहम् ॥

टीका -

ஓ ஷண்முகா ! மூன்று லோகங்களிலும் பிரஸித்தமான, உத்தமமாகிய, இந்த கணபதி விரதத்தை முன்காலத்தில் தேவமுனி கந்தர்வ, கின்னரர்களால் அனுஷ்டிக்கப்பட்டதே அல்லாமல் சாமான்யமல்ல என்று இந்த பிரகாரமாக சாம்பசிவ மூர்த்தியானவர் சுப்ரமண்யருக்கு இந்த விரதத்தை உபதேசித்தார். ஆகையால் ஓ தர்மராஜாவே ! நீ இந்த விரதத்தை அனுஷ்டித்தால் உனக்கு சத்ரு ஜயம் உண்டாகும். நான் உனக்கு சத்தியமாய்ச் சொன்னேன் என்று இந்த பிரகாரம் சூத ரிஷி சொன்னார்.

एतद्व्रतं हरिश्चापि दमयन्ती पुराकरोत् ।
कृष्णो जाम्बवतीमादात्स्यमन्तकमणिं तथा ॥

दमयन्ती नलं चैव व्रतस्यास्य प्रभावतः ।

டீகா -

முன்காலத்திலே தமயந்தியானவள் இந்த விரதத்தை அனுஷ்டித்து நள மஹாராஜானை விவாஹம் செய்து கொண்டாள். ஸ்ரீகிருஷ்ணசுவாமியானவர் அந்த விரதத்தை அனுஷ்டித்து ஜாம்பவதியையும் சமந்தகம் (ஸ்யமந்தகம்) என்கிற ரத்னத்தையும் அடைந்தார். அது எப்படி என்றால்,

சத்ராஜிதன் என்கிற ராஜாவானவன் சூர்யன் வரத்தால் சமந்தக (ஸ்யமந்தக) ரத்னத்தை சம்பாதித்து ஸ்ரீகிருஷ்ணரைப் பார்ப்பதற்காகத் துவாரகைக்குப்போய் கிருஷ்ணரைத் தரிசனம் செய்தார். அப்போது அந்த கிருஷ்ணரானவர் சத்ராஜித்த ராஜனைப் பார்த்து அந்த சமந்தகமணியைக் கேட்க, சத்ராஜிதனானவன் அந்த ரத்னத்தைக் கொடுக்காமல் தன் ஊருக்குப்போய் தன் தம்பி பிரஸேனனுக்குக் கொடுத்தார். சில நாட்களுக்குப் பின்பு அந்த பிரஸேனன் அந்த ரத்னத்தைத் தரித்துக்கொண்டு வேட்டையாடுவதற்காகக் காட்டிற்குப் போனான். அப்போது ஒரு சிம்ஹம் வந்து அந்த சத்ராஜித்தன் தம்பியைக் கொன்று, அந்த ரத்னத்தை எடுத்துக் கொண்டு நடந்தது. அப்போது ஜாம்பவந்தன் என்கிற கடிகளுக்கு ராஜாவானவன் அந்த சிம்மத்தைக்க கொன்று விட்டு, அந்த ரத்னத்தை எடுத்துக்கொண்டு தன் குகைக்குப் போய்விட்டான். லோகத்தில் எல்லாரும் ஸ்ரீகிருஷ்ணரானவர் மேற்படி சத்ராஜிதன் தம்பியை சம்ஹாரம் செய்து, அந்த சமந்தகமணியை அபஹரித்தார் என்று சொல்லுகிறார்கள்.

கிருஷ்ணரானவர் உலகத்தார் தன்னைச் சொல்லுகிற அபவாத தோஷத்தைக் குறித்து, சுக்லபக்ஷ சதுர்த்தியில் பால் குடத்தில் சந்திரனைப் பார்த்தவர்களுக்கு சகலவித அபவாதம் சித்தித்ததென்று பலபத்ரருடன் சொல்ல, அதற்கு அவர் சதுர்த்தி சந்திரனுக்கு விநாயகர் எப்படி சாபம் கொடுத்தார் என்று கேட்க, கிருஷ்ணர் சொல்லுகிறார், 'ஓ அண்ணா, ஒருநாள் விக்னேச்வரரானவர் கொஞ்சம் (குஞ்சர) சரீரத்துடன் கைலாசத்துக்குப் போனார். அவரை சந்திரன் பார்த்துச் சிரிக்க, விநாயகரானவர் சந்திரனைப் பார்த்து, 'உன்னைச் சதுர்த்தியில்

பால்குடத்தில் எவர் பார்க்கிறார்களோ அவர்களுக்கு அபவாத தோஷம் சித்திக்கக் கடவது" என்று சாபம் கொடுத்தார். அப்போது சந்திரனானவர் வணக்கமாய் விநாயகரைப் பார்த்து சுப்ரமணியருக்கு ஈச்வரன் சொன்ன பிரகாரம் என்னை பாத்ரபத சுத்த சதுர்த்தியில் யதா விதியாய் விநாயகரைப் பூஜைசெய்து, விரதத்தை அனுஷ்டித்தவர்களுக்கு சம்பவித்த அபவாததோஷம் தொலைந்து, சத்ரு ஜயமும், மோக்ஷ சாம்ராஜ்யமும் சித்தியும் தனகன வஸ்து வாஹநம் முதலாய் அநேக வஸ்திராபரண-புத்ர-பௌத்ர கோமஹிஷ்யாபி விருத்தியும் ஆகிய இவைகளெல்லாம் உண்டானதுபோல் உனக்கு உண்டாகுமென்று விநாயகர் சந்திரனுக்குச் சொன்னார்.

அவர் சொன்னபடிக்கு அந்த விரதத்தை சந்திரன் முதலானவர்கள் அனுஷ்டித்தார்கள். கிருஷ்ணரானவர் இந்த விரதத்தை அனுஷ்டிக்கவேண்டுமென்று பலபத்ரருக்குச் சொல்ல, பலபத்தரனானவர் தன் பட்டிணதத்தில்போய் கணபதி விரதம் செய்யுங்கள் என்று தண்டோரா மூலமாய் அந்த பட்டிணத்தில் உள்ளவர்களுக்குத் தெரிவித்து அவரும், கிருஷ்ணர் முதலானவர்களும் இந்த விநாயக விரதத்தைச் செய்தனர். பின்பு கிருஷ்ணரானவர் விநாயகரின் அனுக்ரஹத்தால் ஜாம்பவந்தர் இருக்கிற குகைக்குப்போக, ஜாம்பவந்தரானவர் அந்த சமந்தகமணியையும், தன் குமாரத்தியுமான ஜாம்பவதீயையும் கிருஷ்ணருக்குக் கொடுத்தார். கிருஷ்ணரானவர் அந்த ரத்னத்தைக் கொண்டு வந்து முன்சொன்ன சத்ராஜித மஹாராஜனுக்கு கொடுக்க, அவன் அதை வாங்கிக் கொண்டு தன் குமாரத்தியான சத்தியபாமாவை கிருஷ்ணருக்குக் கொடுக்க, கிருஷ்ணரானவர் ஜாம்பவதியையும் சத்தியபாமாவையும் விவாஹம் செய்து கொண்டார். இதுதான் கிருஷ்ணர் சியமந்தகமணியையும், ஜாம்பவதியையும் அடைந்த கதை.

**शक्रेणपूजितः पूर्वं वृत्रासुरवधे तथा ।**
**रामदेवेन तद्वश्च सीताया मार्गणे पुरा ॥**

भगीरथेन तद्वश्च गङ्गामानयता पुरा ।
अमृतोत्पादनार्थाय तथा देवासुरैरपि ॥

कुष्ठव्याधियुतेनापि साम्बेनाराधितः पुरा ।
एवं मुक्तस्तु सूतेन सानुजः पाण्डुनन्दनः ॥

पूजायामास देवस्य व्रतं त्रिपुरघातिनः ।
शत्रु सङ्घं निहत्याशु प्राप्तवान् राज्यमोजसा ॥

தேவேந்திரனானவன் விருத்ராசுரனை வதம் செய்யப் போகிறபோதும், ஸ்ரீராமரானவர் சீதையைத் தேட ஆரம்பிக்கிற போதும். பகீரதனானவன் கங்கையை பூமியில் கொண்டுவர யெத்தனிக்கும்போதும்[33], தேவர்களும் - அஸுரர்களும் திருப்பாற் கடலைக் கடைய ஆரம்பிக்கும்போதும், குஷ்டவியாதி நிவர்த்தியாகிறதற்காக சாம்பசிவனும்[34] (சாம்பனும்) ஆகிய இவர்களெல்லாம் இந்த கணபதி பூஜை செய்தார்கள் என்று இந்த பிரகாரம் சூதமஹரிஷி சொல்ல தர்மராஜாவானவர் தன்னுடைய தம்பிமாருடன்கூட இந்த விரதத்தை அனுஷ்டித்து பராக்கிரமத்தினால் சத்ருக்களை ஜெயித்து ராஜ்யத்தை அடைந்தார்.

पूजयित्वा महाभागं गणेशं सिद्धिदायकम् ।
सिध्यन्ति सर्वकार्याणि मनसा चिन्तितान्यपि ॥

तेन ख्यातिगतो लोके नाम्ना सिद्धिविनायकः ।
विद्यारम्भे पूजितश्चेद्विद्यालाभो भवेद्ध्रुवम् ॥

जयं च जयकामश्च पुत्रार्थीलभते सुतान् ।
पतिकामा च भर्तारं सौभाग्यं च सुवासिनी ॥

विधवा पूजयित्वा तु वैधव्यं नाप्नुयात् क्वचित् ।
ब्राह्मणः क्षत्रियो वैश्यश्शूद्रो वा वाप्यथवा स्त्रियः ॥

अर्थः कश्चापि भक्त्या च व्रतं कुर्याद्यथाविधि ।
सिध्यन्ति सर्वकार्याणि गणनाथप्रसादतः ।।
पुत्रपौत्राभिवृद्धिश्च गजान्तैश्वर्यमाप्नुयात् ।।

யாவரும் மனதால் நினைத்த கார்யங்களெல்லாம் விநாயக பூஜையால் ஸித்தியாகின்றது. ஆகையால் கணபதியானவர் **ஸித்திவிநாயகர்** என்று உலகத்தில் பெயர் பெற்றார். அதனால் அந்த விநாயகரை வித்யாரம்ப காலத்தில் பூஜை செய்தால் வித்யாலாபம் நிச்சயமாய்க் கிடைக்கும். ஜயத்தை விரும்புகிறவர்கள் ஜயத்தையும், புத்திரர்களை விரும்புகிறவர்கள் புத்திரர்களையும், புருஷனை விரும்பின பெண்கள் புருஷனையும், ஸௌபாக்யத்தைக் கோரிய சுமங்கலிகள் ஸௌபாக்யத்தையும் அடைகிறார்கள். விதவை ஸ்திரீ பூஜை செய்தால் எந்த ஜன்மத்திலும் விதவைத்தன்மை அடையமாட்டாள். ஆகையால் பிராம்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைச்யர்கள், மற்றோர்கள், ஸ்திரீகள், பாலர்கள் இவர்கள் எல்லோரும் யதா விதிப்படிக்கு பயபக்தியுடன் இந்த விரதத்தை அனுஷ்டித்தால் ஸ்ரீ கணபதி அனுக்கிரஹத்தால் சகல கார்ய ஸித்தியும், புத்ரபௌத்ராபிவிருத்தியையும் அதிகமான சம்பத்தையும் அடைந்து சுகமாய் இருப்பார்கள்.

।। इति स्कान्दपुराणे स्कन्दमहेश्वर संवादे विनायकव्रतकल्पः सम्पूर्णः ।।

இந்த நூல் துன்முகி வருஷம் கார்த்திகை மாதம் 18-ந் தேதி மங்களவாரம் மத்யான்னத்தில் பார்வதசஞ்ஜீவி அய்யர் ஹஸ்தத்தால் எழுதி (நிறைவு பெற்றது) சமாப்தியாயிற்று. (1-12-1801)

# ஸரஸ்வதி விரத கதை

श्री सूत उवाच -

श्रुणुध्वं मुनयस्सर्वे व्रतानामुत्तमं व्रतम् ।
दुर्गालक्ष्मी महादेव्यः पूज्या यस्मिन् प्रयत्नतः ।।

आश्वीजमासे सम्प्राप्ते प्रतिपच्छु भवासरे ।
तदारभ्य प्रयत्नेन नवरात्रिषु पूजयेत् ।।

अथवा मूलनक्षत्रे समारभ्य प्रपूजयेत् ।
तत्राप्यशक्तो विप्रेन्द्रा नवम्यां तु प्रपूजयेत् ।।

एतद्व्रतं नरः कृत्वा सर्वसिद्धिमवाप्नुयात् ।
नित्यैश्वर्य समायुक्तो दुर्गालोकमवाप्नुयात् ।।

तात्पर्यम् -

ஸூத மஹரிஷியானவர் சௌனகாதி ரிஷிகளைப் பார்த்துச் சொல்கிறார். ஓ ரிஷிஸ்வரர்களே ! கேளுங்கள். சகலமான விரதங்களிலே உத்தமமான விரதத்தைச் சொல்கிறேன். அது என்னவென்றால் சாந்த்ரமானப்படிக்கு ஆஸ்வயுஜ மாசத்தில் வரப்பட்ட சுக்லபக்ஷ பிரதமை முதல்கொண்டு ஒன்பது நவராத்ரிகளில் துர்கா / லக்ஷ்மி / ஸரஸ்வதியை பூஜை செய்யவேண்டியது. அப்படி செய்யாத (செய்ய இயலாத) பக்ஷத்தில் மூலா நக்ஷத்திரம் முதல்கொண்டு பூஜை செய்யவேண்டியது. ஓ பிராம்மணர்களே ! அப்படிச் செய்கிறத்துக்கும் சக்தியில்லாவிட்டால் நவமி திதி நாளில் பூஜை செய்யவேணும். இந்த விரதத்தை மனுஷ்யர்கள் அனுஷ்டித்தால் சகல சித்திகளுங்கிடைத்து எப்போதும் ஐச்வர்யத்துடன் கூடியிருந்து அந்தியத்தில் கடைசி காலத்தில் துர்காலோகம் போய் சேருவார்கள். இந்த பிரகாரம் ஸூதரிஷி சொல்ல ரிஷிகள் கேட்கிறார்கள்.

ऋषय ऊचु -

**पुरा केन कृतं ह्यत्र केन प्राप्तं महत्सुखम् ।**
**एतद्ब्रूहि महाभाग कृपास्मासु तवास्ति चेत् ।।**

ஓ மஹாத்மாவான சூத மஹரிஷியே ! முன்காலத்திலே இந்த விரதத்தை எவர் செய்தார்கள்? அப்படிச் செய்து அதிகமான சுகத்தை யார் அடைந்தார்கள்? நீர் எங்கள் மேல் தயவு உண்டாயிருந்தால் (உள்ளவராயிருந்தால்) இந்த விரத மாஹாத்மியத்தை எங்களுக்கு நன்றாய் சொல்லும் என்று ரிஷிகள் கேட்க, சூதரிஷி சொல்கிறார் -

श्री सूतः -

**श्रोतव्यं च प्रयत्नेन कृतं व्रतमनुत्तमम् ।**
**पुराकृतयुगे चासीत् सुकेतुरिति विश्रुतः ।।**
**राजा परमधर्मात्मा प्रजापालनतत्परः ।**
**नित्यैश्वर्यसमायुक्तः हस्त्यश्वरथसङ्कुलः ।।**

**சூதர் சொல்கிறார் -**

ஓ, பிராமணர்களே ! உத்தமமான இந்த விரதத்தை அனுஷ்டித்தவனைச் சொல்கிறேன் கேளுங்கள்.

முன் கிருதயுகத்திலே சுகேது மஹாராஜா என்று ஒருவன் இருந்தான். அவன் எப்பேர்ப்பட்டவனென்றால் அவன் மஹத்தான தர்மாத்மா, பிரஜைகளை ரக்ஷிப்பதில் அதிக ஆசையுள்ளவன். எப்போதும் சம்பத்துண்டானவன் ரத, கஜ, துரக, பதாதிகள் என்கிற சதுரங்க சைன்யமுள்ளவன்.

**तस्य भार्या विशालाक्षी सुरूपा प्राप्तयौवना ।**
**सा भूत्नाम्ना सुवेदीति सर्वमङ्गलसंयुता ।।**

அப்பேர்ப்பட்ட சுகேது மஹாராஜாவினுடைய பார்யாள் சுவேதி என்கிற பெயரை உடையவள். அவளுக்கு விசாலமான நேத்ரமும், நல்ல ஸ்வரூபமும் யௌவன வயசும் பொருந்தி சகல சுபத்துடனும் கூடியவள்.

सर्वराष्ट्रे न दुर्भिक्षं न भयं चास्य विद्यते ।
एवं प्रवर्तमानस्य ज्ञातीनां क्रोधमागमत् ।।

இந்த சுகேது மஹாராஜாவின் தேசத்தில் க்ஷாமமே (பஞ்சமே) இல்லை. இவனுக்குச் சத்ருவினால் பயமில்லை. இப்பேர்ப்பட்ட ராஜாவுக்குப் பங்காளிகளால் விரோதம் சம்பவித்தது.

सोऽपि राजा महाभागश्चतुरङ्ग बलान्वितः ।
ज्ञातयो यत्र वर्तन्ते तत्र यात्रां चकार ह ।।

அந்த சுகேது மஹாராஜாவானவன் சதுரங்க பல சைன்யங்களைச் சேர்த்துக்கொண்டு (அந்த பங்காளிகளுடன் சண்டை செய்யப் புறப்பட்டு) அந்த பங்காளிகள் இருக்கிற இடம் போய்ச் சேர்ந்தான்.

प्रययौ ज्ञातयो यत्र सुकेतुस्तत्र तैः सह ।
सुयुद्धं कृतवान् राजा तैः सर्वं च विनाशितम् ।।

அப்படிப்போய்ச் சேர்ந்த ராஜாவானவன் அந்தப் பங்காளிகளுடன் மிகுந்த சண்டை செய்து அவர்களால் (தன் ஸைன்யங்களெல்லாம் நாசமடைந்த பாணங்களால் அடிபட்டவனானான்) படைகள் யாவும் அழிக்கப்பட்டது.

पालायमानस्य ततो सुवेदी सहसाम्ययात् ।
भर्त्रा साकं समागम्य वनान्तरमुपागमत् ।।

वनान्तरं प्रविश्याथ गह्वरं (गहनं) वनमाविशत् ।
निरन्नौ क्षुधितौ शान्तौ क्षुत्क्षामेण च संयुतौ ।
शरनिर्भिन्नगात्रस्तु स राजा रोगितां गतः ।।

அப்படி அவன் நாசமடைந்தவனாகி வனத்திற்கு ஓடிப்போகும்போது அவனுடைய பாரியாளான சுவேதியானவள் பலாத்காரமாய் அவனுடன்கூட அடர்ந்த வனத்துக்குப்போய் அவர்களிருவரும் போஜனமில்லாமல்

பசியால் பாதையை (துயரத்தை) அடைந்து (அங்கே இருக்கிற குகைகளிலும் வாஸம் செய்து) பின்பு அம்புகளால் கிழிக்கப்பட்ட உடலை உடைய அவன் வியாதியை அடைந்தான்.

न च चारयितुं शक्तः पतियुक्ता वनान्तरे ।
सापि दुःखेन महता विललाप सुदुःखिता ।।

அதன்பின்பு அந்த ராஜாவானவர் போஜனம் இல்லாததினால் நடக்கிறதற்கு சக்தியற்று அசக்தனானார். அவன் பார்யாளும் அந்த வனத்தின் மத்தியில் அதிக துக்கத்தை அடைந்து புலம்பினாள்.

साप्यशक्तं वाहयित्वा विचचार वनाद्वनम् ।
तस्याः शोकं नाशयितुं मुनिराङ्गिरसोऽभ्गात् ।।

அப்படி அவன் நடக்கிற சக்தியில்லாமையால் அவன் பெண்சாதியாகிய சுவேதி கணவனைத் தன் தோளின்மேல் எடுத்துக்கொண்டு, அந்த வனத்தில் (காடுகாடாக) சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். அந்த சமயத்தில் ஆங்கிரஸ மஹரிஷியானவர் அவர்களுடைய துயரத்தைப் போக்குவதற்காக) அவர்களிடத்தில் வந்தார்.

दृष्ट्वा तु शोकसंतप्तां पतिवाहभरान्विताम् ।
दयालुराह तां वीक्ष्य मा रोदीर्भद्रमस्तु ते ।।

அப்படி வந்த ஆங்கிரஸ முனிவரானவர் அவ்விருவரையும் பார்த்து அதிக துக்கத்தை அடைந்த சுகேது மஹாராஜாவையும், கணவனைச் சுமந்தவளாயும் இருக்கிற சுவேதியையும் பார்த்து, அவர்கள்மேல் அதிக கிருபை உண்டாகி, "நீங்கள் துக்கப்படவேண்டியதில்லை. உங்களுக்கு அதிக சுபம் உண்டாகட்டும்" என்று சொல்லி அந்த ராஜாவைக் கேட்கிறார்.

कौ युवां दम्पती यातौ बहुदुःखसमन्वितौ ।
राज्यबन्धुजनैर्हीनौ क्षुत्क्षामेण च पीडितौ ।।

एकाकिनौ समायातौ किं कार्यं वनगह्वरे ।
एतद्ब्रूहि महाभाग मा शोकं कर्तुमर्हसि ।
रक्षिष्यामि न सन्देहः घोरदुःखार्णवादहम् ।।

அதிக துக்கத்தை அடைந்தவராயும், ராஜ்யத்தையும், பந்து ஜனங்களையும் விட்டவராயும், அதிகமான பசியால் பாதையை (துயரத்தை) அடைந்தவராயும், சகாயமில்லாமல் ஒண்டியாய் (தனிமையாக) இருக்கிறவராயுமாகிய நீங்கள் யார்? எதற்காக இவ்விடம் வந்தீர்கள்? இந்த வன குகையில் ஏன் இருக்கிறீர்கள்? இந்த சங்கதிகளை எல்லாம் நன்றாய் எனக்குச் சொல்லுங்கள். நீங்கள் துக்கப்படவேண்டாம். நீங்கள் துக்க சமுத்திரத்தைவிட்டு நீங்கும்படிக்கு உங்களை நான் ரக்ஷிக்கிறேன். இதற்கு எள்ளளவும் சந்தேகமில்லை என்று இந்த பிரகாரம் ஆங்கிரச முனிவர் கேட்டார்.

सुवेद्युवाच -

भगवन् देवदेवेश मुनिनाथ महामते ।
राज्यबन्धुविहीनोऽयं स्वजनैश्च निराकृतः ।।

केनोपायेन वै ब्रह्मन् स्वराज्यं केन हेतुना ।
पुत्रसम्पत्तिमेवाथ प्राप्नुयात् केन वै सुखम् ।।

அப்படி ஆங்கிரஸர் கேட்க, சுவேதி சொல்லுகிறாள். ஓ பகவந்தரே, (ஸ்வாமீ!) மஹாத்மாவான முனிசிரேஷ்டரே ! நாங்கள் ராஜ்யம், பந்துவிஹீனராயும் (அற்றவராயும்), (ஞாதிகளால் நிராக்க(புறக்கணிக்க)ப்பட்டவராயும், ஆகிய நாங்கள் (இவர்) ராஜ்யத்தையும், புத்ரசம்பத்தையும், சுகத்தையும் எப்படி அடைவோம்(வார்).

तद्ब्रूहि मे महाभाग कृपालो दीनवत्सल ।

மஹாத்மாவாயும், தயையுள்ளவராயும், எளியோரிடத்தில் வாத்சல்யமுள்ளவராயும் (அன்பு, கருணை) ஆகிய முனிச்ரேஷ்டரே ! அதை எனக்குச் சொல்லுங்கள் என்று கேட்டாள். அதற்கு ஆங்கிரஸர் சொல்லுகிறார்.

आङ्गिरस उवाच -

शीघ्रं याहि मया साकं पञ्चवट्यां शुभे तटे ।
दुर्गास्थानं महाक्षेत्रमत्रसन्निहिता सदा ।।

तस्यां (यदि) सम्पूजयते देवी पुत्रपौत्रादिसम्पदः ।
राज्यं च महदैश्वर्यं पुनः प्राप्तो भविष्यति ।।

நீங்கள் சீக்கிரமாய் என்னுடன் கூடவாருங்கள். பஞ்சவடீ தடத்தில் துர்கை சன்னிஹிதமாய் (அருள்பாலிப்ப வளாக) இருக்கிறாள். அந்த பஞ்சவடியில் துர்காதேவியை நீ (அவர்) பூஜை செய்தால் புத்ர, பௌத்ராள் முதலான சம்பத்துக்களும், ராஜ்யத்தையும், அதிக ஐச்வர்த்தையும் மறுபடி நீங்கள் (அவர்) அடையுவீர்க(வார்)ளென்று சொன்னார்.

सापि तद्वचनं श्रुत्वा चकार गमने मतिम् ।
स्वपतिं वाहयित्वाथ तेन साकं ययौ मुदा ।।

ततस्सुदूरमध्वानं गत्वा पञ्चवटीतटम् ।
ततःस्नानं कृतत्की वेदीगा (स्व) पतिना सह ।।

तद्ब्राह्मणेन संयुक्ता दुर्गां देवीं सरस्वतीम् ।
अङ्गीरसो महातेजाः कारयामास पूजनम् ।।

அவன் அந்த வார்த்தையைக் கேட்டு அவாள் அப்படியே (அவ்வாறே) பஞ்சவடிக்குப் போக நிச்சயித்துத் தன் புருஷனைச் சுமந்துகொண்டு அந்த முனிஸ்வரர் பின்னாலே பகு(வெகு) தூரம்போய், அந்த பஞ்தசவடீ தடத்தைச் சேர்ந்து தன் புருஷன் சகிதமாய் ஸ்நானம் செய்து துர்கா ஸரஸ்வதியை பூஜை செய்தாள்.

प्रतिपत्तु समारभ्य नवम्यन्तं सुभक्तितः ।
कुङ्कुमागरुकस्तूरीकर्पूरैश्च समन्वितम् ।।

नानाविधैस्सुपुष्पैश्च रक्तवस्त्रादिभिः क्रमात् ।
पूजयित्वा महादेवीं षोडशैरुपचारकैः ।।

அந்த இடத்திலே ஆஸ்வீஜமாச சுத்தபிரதமை முதற்கொண்டு நவமி வரையில் ஒன்பது நாளும் குங்குமம், அகரு (அகில்), கஸ்தூரி, (பச்சைக்)கற்பூரம் இவைகளுடனும் இன்னும் அநேகவிதமான புஷ்பங்களாலும், சிவந்த வஸ்த்ரங்களாலும் கிரமமாய் துர்காதேவியை ஷோடச (16 வகை) உபசாரங்களால் பூஜை செய்தாள்.

दशमेऽहनि संप्राप्ते प्रातःस्नात्वा महामतिः ।
हवनं कारयामास पायसान्नेन मन्त्रितम् ।।

दुर्गादेवीति मन्त्रेण चकार हवनं मुदा ।

இந்தப் பிரகாரம் அந்த ஒன்பது நாளும் துர்கா ஸரஸ்வதியை பூஜை செய்து பத்தாம் நாள் உதயத்தில் ஸ்நானம் செய்து, துர்காம் தேவீம் என்னும் வேத மந்திரத்தால் பாயசான்னத்தை அந்த ஆங்கிரஸர் முனிவரைக் கொண்டு ஹோமம் செய்வித்தாள்.

आङ्गीरसं महाभागं दम्पतीपूजनं मुदा ।
दशदानान्यथो कृत्वा ब्राह्मणानां विशेषतः ।।

व्रतं समाप्य विधिवदाश्रमं पुनरागमत् ।

அதன் பின்பு மஹாத்மாவான ஆங்கிரஸ மஹாமுனிவரை தம்பதி பூஜைசெய்து பிராம்மணர்களுக்கு 'தசதானம்' கொடுத்து இந்தப் பிரகாரம் விரதத்தை நிறைவேற்றி, அதை (அவ்விடத்தை)விட்டுப் புறப்பட்டு ஆங்கிரஸ மஹாமுனியின் ஆச்ரமத்தை அடைந்தார்(கள்).

तस्य व्रतस्य माहात्म्यादन्तर्वत्नी बभूव ह ।
दशमे मासि सम्प्राप्ते सुषुवे लोकसुन्दरम् ।।

அந்த விரத பலத்தால் அந்த சுவேதியானவள் கர்ப்பவதியாகி பத்தாம் மாதத்தில் லோக சுந்தரமாய் ஒரு பிள்ளையைப் பெற்றாள்.

पुत्रसञ्जननं दृष्ट्वा ऋषिराङ्गिरसो मुनिः ।
जातकर्मादिसंस्कारं चकार भगवानृषिः ।
"सूर्यप्रताप नामेति" नाम तस्य चकार ह ।।

அந்த ஆங்கிரஸ மஹாமுனிஸ்வரர் அவளுக்குக் குமாரன் பிறந்ததையறிந்து அந்தப் பிள்ளைக்கு ஜாதகர்மா முதலானவைகளைச் செய்து சூர்யப்ரதாபன் என்று பெயரிட்டார்.

शुक्लपक्षे यथा चन्द्रो वर्धते च दिने दिने ।
तथैव वर्धते बालो मात्रा पित्रा च पोषितः ।।

தாய், தகப்பனால் போஷிக்கப்பட்டு அந்தப் பிள்ளை யானவன் சுக்லபக்ஷத்து சந்திரனைப்போல வளர்ந்தான்.

स बालो यौवनं प्राप्तः सर्वशास्त्रविशारदः ।
ऋषिदत्तप्रभावेण महाबलपराक्रमः ।।

बालः शस्त्रास्त्रसंपन्नो ह्यनुज्ञाप्य महामुनीन् ।
स गत्वा शत्रुदेशं तु सुयुद्धं कृतवान् तथा ।
तेन ध्वस्तं शत्रुसैन्यं पलायनपरं ह्यभूत् ।।

அந்தப் பிள்ளையானவன் யௌவன வயதை அடைந்து சகல சாஸ்த்ர பாரங்கதனாகி ஆங்கிரஸ ரிஷியால் கொடுக்கப்பட்ட அனுக்கிரஹத்தால் மஹா பலபராக்கிரமம் உடையவனாகி அவருடைய ஆக்ஞைபடிக்கு (ஆசிபெற்று) தன் சத்ருக்கள் இருக்கிற இடத்துக்குப்போய் அவர்களுடன் கடுமையான யுத்தம் செய்து, அவர்களை ஜயித்தான். அவர்கள் அவனுக்கு பயந்தோடிப் போனார்கள்.

स्वराज्यं प्राप्तवान् बालो मात्रा पित्रा समन्वितः ।
वर्षे वर्षे च सा देव्याश्चकारैतद्व्रतं शुभम् ।।

तेन पुण्यप्रभावेण पुत्रपौत्रादिसंयुता ।
इह सौख्यं समासाद्य परत्र च शुभां गतिम् ।।

அந்தப் பிள்ளையானவன் தன் சத்ருக்களை ஜயித்துத் தன்னுடைய தாய்-தகப்பனுடன்கூட தன் ராஜ்யத்தை அடைந்தான்.

அந்த சுவேதியானவள் வருஷம்தோறும் (ஒவ்வொரு ஆண்டிலும்) துர்கா சரஸ்வதியைப் பூஜை செய்து அந்த பூஜா (புண்ய)பலத்தால் புத்ரபௌத்ராதிகளுடன் இந்த லோகத்தில் சகல சௌக்யங்களையும் அடைந்து, அந்தியத்தில் (முடிவில்) நற்கதி அடைந்தாள்.

तस्मादेतद्व्रतं कार्यं सर्ववर्णाश्रमादिभिः ।
ये च शृण्वन्ति सततं श्रावयन्ति च ये नराः ।
ते सर्वे पापनिर्मुक्ता यास्यन्ति परमां गतिम् ।।

அதனால் இந்த விரதத்தை சகலமானவர்களும் செய்யவேண்டியது. இந்தக் கதையை யார் கேட்கிறார்களோ, யார் சொல்கிறார்களோ அவர்கள் பாபம் நீங்கி சத்கதியை அடைவார்கள்.

।। इति स्कान्दे पुराणे सरस्वतीव्रतकथा ।।
(शमी) कल्पः सम्पूर्णम्

वह्निप्रार्थना -

दशम्यां सायाह्ने - शमीपूजां कृत्वा - तदनन्तरं ध्यानमन्त्रः

शमी शमयते पापं शमी शत्रुविनाशिनी ।
अर्जुनस्य धनुर्धारी रामस्य प्रियदर्शिनी ।।

शमीं कमलपत्राक्षीं शमीं कण्टकधारिणीम् ।
आरोहतु शमीं लक्ष्मीः नृणामायुष्यवर्धिनीम् ।।

नमो विश्वासवृक्षाय पार्थशस्त्रास्त्रधारिणे ।
त्वत्तः पत्रं प्रतीच्छामि सदा विजयदो भव ।।

धर्मात्मा सत्यसन्धश्च रामो दाशरथिर्यदि ।
पौरुषे चाप्रतिद्वन्द्वः शरैनं जहि रावणिम् ।

अमङ्गलानां शमनीं दुष्कृतस्य च नाशिनीम् ।
दुःस्वप्नहारिणीं धन्यां प्रवस्येऽहं शमीं शुभाम् ।।

।। इति नमस्कारः ।।

।। सम्पूर्णम् ।।

இது துன்முகி நாம சம்வத்ஸரம் கார்த்திகை மாசம் 18-ந் தேதி மங்களவாரத்தில் கள்ளப்புலியூர் பர்வத சஞ்ஜீவி அய்யரால் எழுதி சமாப்தியாயிற்று. (1-12-1801)

# ஸரஸ்வதி விரத கதை வசனம்

சூத மஹரிஷியானவர் சௌனகாதி ரிஷிகளைப் பார்த்துச் சொல்லுகிறார். கேளுங்கள் ரிஷீஸ்வரர்களே ! சகலமான விரதங்களிலே உத்தமமான சரஸ்வதி விரதத்தைச் சொல்லுகிறேன். அது எப்படி என்றால், சாந்த்ரமான ரீதிப்படிக்கு வருஷந்தோறும் வருகிற ஆஸ்விஜ மாசத்திலே சுக்லபக்ஷ பிரதமை முதற்கொண்டு ஒன்பது ராத்திரி வரையில் துர்கா, லக்ஷ்மீ, சரஸ்வதியை பூஜை செய்யவேண்டியது. அப்படி பிரதமை முதல்கொண்டு பூஜை செய்யாத பக்ஷத்தில் மூலா நக்ஷத்திரம் முதல்கொண்டு பூஜை செய்ய வேண்டியது. அப்படி செய்கிறதுக்குச் சக்தியில்லாத பக்ஷத்தில் நவமி திதி நாளில் பூஜை செய்யவேண்டியது. இந்த விரதத்தை மனுஷ்யாள் அனுஷ்டித்தால் சகல சித்திகளும் கிடைத்து, எப்போதும் ஐஸ்வர்யத்துடன்கூடி வாழ்ந்திருந்து சரீர அந்தியத்தில் துர்கா லோகம் போய்ச் சேருவார்கள். இந்தப் பிரகாரம் சூத மஹாரிஷியானவர் சொல்ல, அவரை ரிஷிகள்

கேட்கிறார்கள். "ஓ மஹாத்மாவான சூத மஹரிஷியே முன் காலத்திலே இந்த விரதத்தை யார் செய்து மஹாசுகத்தை அடைந்தார்கள்? அப்படி சுகத்தை அடைந்தவர்களையும் இந்த விரதத்தின் மாஹாத்மியத்தையும் நீர் எங்கள்மேல் தயவு செய்து எங்களுக்கு நன்றாய் சொல்லவேணும்" என்றார்கள். அப்போது சூத ரிஷியானவர் அவர்களுக்குச் சொல்லுகிறார். ஓ பிராம்மணர்களே! உத்தமமான இந்த சரஸ்வதி விரதத்தை அனுஷ்டித்தவர்களை சொல்லுகிறேன், கேளுங்கள். அது எப்படி என்றால்,

முன் கிருதயுகத்திலே சுகேது மஹாராஜா என்று ஒருவன் இருந்தான். அவன் எப்பேர்ப்பட்டவன் என்றால் அவன் மஹாதர்மாத்மா. பூஜைகளை ரக்ஷிப்பதில் அதிக ஆசையுள்ளவன். எப்போதும் சம்பத்துள்ளவன். ரத, கஜ, துரக, பதாதிகளென்ற சதுரங்க பல சைன்யமுள்ளவன். அவன் பார்யாள் சுவேதி என்கிற பேரையுடையவள். அவளுக்கு விசாலமான நேத்ரமும், நல்ல சுவரூபமும், சௌந்தர்யமும் யௌவன வயசும் பொருந்திய சுபலட்சணத்துடன் கூடினவள். அந்த சுகேது மஹாராஜாவின் தேசத்திலே எப்போதும் க்ஷாமமே (பஞ்சமே) இல்லை. அவனுக்குச் சத்ருவினால் பயமுமில்லை. அப்பேர்ப்பட்ட ராஜாவுக்குத் தன் பங்காளிகளால் விரோதம் சம்பவித்தது. அப்போது அந்த சுகேது மஹாராஜாவானவன், தன்னுடைய சதுரங்க பல சைன்யங்களைச் சேர்த்துக்கொண்டு அந்தப் பங்காளிகளுடன் சண்டை செய்யப் புறப்பட்டு அந்தப் பங்காளிகள் இருக்கிற இடம் போய்ச் சேர்ந்து, அவர்களுடன் பெருஞ்சண்டை செய்து, தன் சைன்யங்களெல்லாம் மாளக் கொடுத்து, தானும் அவர்கள் விட்ட பாணங்களால் அடிபட்டு பயந்து காட்டில் ஓடிப்போனான். அப்போது அவன் பார்யாளும் அவனுடன் கூடவே ஓடிப்போனாள். அப்படியாக அந்த இருவரும் காட்டில்போய் போஜனமில்லாமல் பசியால் வருத்தப்பட்டு நடக்கிற சக்தியற்று அங்கேயிருக்கிற குகைகளில் வாசம் செய்துகொண்டிருந்தார்கள். அப்படியிருக்கும்போது அவன் வியாதியை அடைய, அவன் பார்யாளானவள் அவனைத்

தோள்மேல் எடுத்துக்கொண்டு அந்த வனத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். அப்படி இருக்கும்போது, ஒருநாள் ஆங்கிரஸ மஹரிஷியானவர் அந்த வனத்தில்போய் அவர்களைப் பார்த்து, அவர்கள்மேல் கிருபை வைத்து, நீங்கள் இந்த அளவு துக்கப்படவேண்டியதில்லை. உங்களுக்கு அதிக சௌக்யமுண்டாகும் என்று சொல்லி, பின்பு அந்த ராஜாவின் முகத்தைப் பார்த்து நீங்கள்அதிக துக்கத்தை அடைந்து ராஜ்யத்தையும், பந்துக்களையும் விட்டு அதிகப் பசியால் பாதைப்பட்டு சகாயமில்லாமல் ஒண்டியாய் இருக்கிறீர்களே. நீங்கள் யார்? நீங்கள் எதற்காக இந்த இடத்தில் வந்தீர்கள்? ஏன் இந்த குகையில் இருக்கிறீர்கள்? இந்த சங்கதிகளை எல்லாம் எனக்கு நன்றாய் தெரியச்சொல்லுங்கள். நீங்கள் துக்கப்படவேண்டாம். உங்கள் துக்க சமுத்திரத்தைவிட்டு நீக்கி ரக்ஷிக்கின்றேன். இதற்கு எள்ளளவும் சந்தேகமில்லை பயப்படவேண்டாம் என்றார்.

அப்போது அந்த ராஜாவின் பத்னியான சுவேதியானவள் அவரைப் பார்த்து நமஸ்கரித்து, "ஓ பகவந்தரே! மஹாத்மாவான முனிச்ரேஷ்டரே! நாங்கள் எங்கள் ராஜ்யத்தையும் பந்துக்களையும் விட்டு தாயாதிகளால் பாதிக்கப்பட்டு இந்த வனத்தில் வந்து அன்ன ஆகாரம் இல்லாமல் அதிக அசௌக்யத்தை அடைந்திருக்கிறோம். நாங்கள் எங்களுடைய ராஜ்யத்தையும், பந்துக்களையும், ஐச்வர்யத்தையும் எப்படி அடைவோம்?" சொல்லுமென்றார். அதற்கு அந்த ஆங்கிரஸ ரிஷியானவர் சொல்லுகிறார், "நீங்கள் சீக்கிரமாய் என்னுடன்கூட வாருங்கள். பஞ்சவடீ தடத்தில் துர்காதேவி வீற்றிருக்கிறாள். நீங்கள் அந்த இடத்தில் போய் அவளை பூஜை செய்தால் புத்ர-பௌத்ராள் முதலான சகல சம்பத்துக்களும் ராஜ்யமும், அதிக ஐச்வர்யத்தையும் அடைவீர்கள்" என்று சொல்ல, அந்த சுவேதியானவள் தன் புருஷனைத் தோள்மேலெடுத்துக்கொண்டு அந்த முனீச்வரர் பின்னால் நடந்து முன்சொன்ன பஞ்சவடீ தடத்தைச் சேர்ந்து தன் புருஷன் சகிதமாய் சுத்த ஜலத்தில் ஸ்நானம் செய்து, ஆஸ்விஜமாச சுத்த பிரதமை முதல் நவமி வரையிலுள்ள

ஒன்பது நாளும் அகரு (அகில்), குங்குமம், கஸ்தூரி, கற்பூரம், சந்தனம், புஷ்பம், சிவந்த வஸ்த்ரம் இவைகள் முதலான நாநாவித வஸ்த்துக்களுடன் துர்காதேவியை கிரமமாய் மந்த்ரோக்தமாய் ஷோடச உபசாரத்தால் பக்தியாய் பூஜை செய்தாள். பத்தாம் நாளாகிய விஜயதசமி உதயத்தில் ஸ்நானம் செய்து துர்காதேவீ என்கிற மந்திரத்தால் பாயசான்னத்தை அந்த ஆங்கிரஸ முனிவரின் உதவியால் ஹோமம் செய்வித்து. அதன் பின்பு அந்த ஆங்கிரஸ மஹரிஷியை தம்பதி சமேதராய் பூஜை செய்து பிராம்மணர்களுக்குத் தசதானம் கொடுத்து, ஸரஸ்வதீ விரதத்தை நிறைவேற்றிப் பின்பு அதைவிட்டுப் புறப்பட்டு அந்த ஆங்கிரஸ மஹாமுனியின் ஆஸ்ரமத்தை அடைந்தாள்.

பின்பு அந்த விரத பலத்தால். அந்த சுவேதியானவள் கர்ப்பமாகி பத்தாவது மாசத்தில் அதிசுந்தரமாய் ஒரு பிள்ளையைப் பெற்று, அந்த ஆங்கிரஸ முனீச்வரரானவர் (கொண்டு) அந்தப் பிள்ளைக்கு ஜாதகர்மம் முதலானவைகளைச் செய்வித்து சூர்யபிரதாபன் என்று பேரிட்டார். பின்பு அந்தப் பிள்ளையானவன் தன் தாய் தகப்பனால் போஷிக்கப்பட்டு சுக்லபக்ஷத்து சந்திரனைப்போல் வளர்ந்து யௌவன வயதை அடைந்து, சகல சாஸ்திர பாரங்கதனாகிய, அந்த ஆங்கிரஸ மஹாமுனிவர் கொடுத்த அனுக்கிரஹத்தால் மஹாபலபராக்ரமத்தை அடைந்து. அவருடைய ஆக்ஞைப்படிக்குத் தன் தேசத்தில் போய் தன் தாயாதிகளுடன் சண்டை செய்து ஜெயித்து அவர்களை அப்பால் ஓட்டிவிட்டு தன் தாய் தகப்பன் சகிதமாய் தன் வீட்டில் (அரண்மனை) போய் சேர்ந்து, தன் தேசத்தை ராஜ்ய பாரம் செய்துகொண்டு சுகமாய் இருந்தான். அவன் தாயாகிய சுவேதியானவள் வருஷம் தோறும் வருகிற ஆஸ்வீஜ மாச சுக்லபக்ஷ பிரதமை முதலாய் ஒன்பது நாளும் விரதமிருந்து துர்கா சரஸ்வதியை பூஜைசெய்து அந்த பூஜா பலத்தால் புத்ர, பௌத்ராதிகளுடன் சகல சௌக்கியங்களையும் அனுபவித்து சரீர அந்த்யத்தில் சுவர்கலோகம் போய் சேர்ந்தாள். இந்த விரதத்தை சகல வருணத்தாரும் செய்யவேண்டியது. இந்தக்

கதையை யார் கேட்கிறார்களோ, யார் சொல்லுகிறார்களோ அவர்கள் பாபம் நீங்கி சத்கதியை அடைவார்கள். இந்தக் கதையை ஸ்காந்த புராணத்தில் கிரந்த சுலோகமாய் சொல்லுகின்றது.

இந்நூலை கள்ளப்புலியூர் பர்வதசஞ்ஜீவி அய்யர் இந்த ஸரஸ்வதி விரத சரித்திரத்தை தமிழில் கதையாகச் செய்தார். ஹேவிளம்பி வருஷம், புரட்டாசி மாதம் 16ந் தேதி குருவாரம் பூர்வபக்ஷம் சதுர்த்தி திதி, விசாக நட்சத்திரம் ப்ரீதீ நாமயோகம், பத்ரகரணம் இவைகள் கூடின சுபதினத்தில் பகல் பத்து நாழிகைக்கு விருச்சிக லக்னத்தில் ஸ்ரீமத் பர்வதசஞ்ஜீவி ஸ்வாமிகள் ஹஸ்தத்தால் எழுதி சம்பூர்ணமாயிற்று. சரஸ்வது சஹாயம். சுபமஸ்து.

# கேதார விரத கதாசங்கிரஹம்

தர்மராஜாவானவர் சகுனியுடன் சூதாடி நாடு, நகரம் முதலானதெல்லாம் தோற்று வனவாசம் செய்துகொண்டு இருக்கும்போது நாரத மஹரிஷியானவர் போய் தர்மராஜாவை கண்டு விசாரித்து கேதார விரதத்தை அனுஷ்டித்தால் சுகப்படுவீர்கள். அதைச் செய்து சுகப்பட்டவர்கள் யாரென்றால் கேளும் தர்மராஜாவே! ஸ்ரீகைலாசத்திலே பரமேஸ்வரனும் பார்வதியும் ரத்ன சிம்மாசனத்தில் வீற்றிருக்கும்போது ஒருநாள் ஹரி பிரும்மேந்திராதி (திருமால், பிரம்மா, இந்திரன் முதலான) தேவர்கள் முதலான சமஸ்தரும் (யாவரும்) சுவாமியையும் அம்மனையும் பிரதக்ஷிணம் வந்து நமஸ்கரித்துப் போனார்கள். பிருங்கிரிஷி மாத்திரம் அம்மனை நீங்கி சுவாமியை மாத்திரம் பிரதக்ஷிணம் செய்தார். அதை அம்மன் பார்த்துக் கோபித்து பிருங்கிரிஷியின் சரீரத்திலுள்ள ரக்தமாம்சங்களை உதறச்சொல்ல அவர் உதறினார். அப்போது பரமசிவனார் அந்த பிருங்கிரிஷிக்கு ஒருதண்டு (தண்டம்) கொடுக்க அதை அவர் ஊணிக் (ஊன்றிக்)கொண்டு சுவாமியின் முன்னே நடனம் செய்து ஸ்துதித்தார். அதை

அம்மன் பார்த்துக் கோபித்து பூலோகத்தில் கௌதமர் ஆஸ்ரமத்தில் போய் நடந்த சங்கதியை கௌதமருக்குச் சொல்ல. அதற்கு அவர் கேதார விரத நோன்பு எடுத்தால் சுவாமி காட்சி கொடுப்பார். அப்போது அவரை இடதுபாகம் கேட்டால் கொடுப்பார். அப்பால் எவர்களும் (எவரும்) உம்மை நீங்கி பிரதட்சணம் செய்யச் சரிப்படாது. ஆகையால கேதார விரத நோன்பு எடுங்களென்று சொல்லி அதை எடுக்கிற விதத்தை சாங்கோபாங்கமாய் சொன்னார். அப்படியே ஈஸ்வரி செய்ய பரமசிவன் வந்து காக்ஷியும், தன் இடது பாகமும் கொடுத்து ஈஸ்வரி சகிதமாய் கைலாசத்துக்குப் போனார். பிறகு அந்த விரதத்தைத் தேவர்கள் முதலான சகலரும் அறிந்து அனுஷ்டித்தார்கள்.

அப்படி இருக்கும்போது தேவஸ்திரீகளானவர்கள் அந்த விரதத்தை பூலோகத்தாருக்குத் தெரிவிக்க நினைத்து தேவ லோகத்தைவிட்டு பூலோகத்திலே கங்கைக்கரை மேலிருக்கிற ஆலமரத்தின் கீழே வந்து கேதார நோன்பு எடுத்தார்கள். அப்போது ஒரு ஏழையான ராஜாவின் குமாரத்திகள் இரண்டு பேர் கல்யாணமில்லாதவர்கள். அதில் மூத்தவள் பெயர் புண்யவதீ. இளையவள் பெயர் பாக்யவதீ. இந்த இரண்டு பெண்களும் அதைப்போய் பார்த்து விசாரித்து. தங்களுடைய கஷ்டத்தைச் சொல்ல அதை அந்த தேவதாஸ்திரீகள் கேட்டு ஆலம் விழுதால் இரண்டு நோன்புக் கயிறு செய்துவைத்து பூஜை செய்து அந்த பெண்களின் கையில் கொடுத்து இந்தப்படி நீங்கள் வருஷந்தோறும் செய்யுங்களென்று சொல்லி திடம் செய்து (சமாதானம் செய்து) அனுப்பினார்கள். அந்தப் பெண்கள் அந்த நோன்புக் கயிற்றை வாங்கியவுடனே அவர்களுடை வீடுகளெல்லாம் ரத்னகசிதமாகவும், வீட்டில் தனதான்யம் முதலான சகல வஸ்துக்களும் அதிகமாகவும் ஆயிற்று.

இவை இப்படி இருக்க அந்தப் பெண்கள் தங்களுடைய பட்டணத்தின் தெருவில் வந்து தங்களுடைய வீடு அடையாளம் தெரியாமல் மயங்க (மயங்கி நிற்க) (கலங்கி

நிற்க) அதை அவர்கள் தகப்பன் அறிந்து, போய் அழைத்துக் கொண்டு தங்களின் வீடு போய்ச் சேர்ந்து நடந்த சங்கதிகளை எல்லாம் விசாரித்து, சந்தோஷித்திருந்தான்.

இவன் இப்படி இருக்க தாசகிரி ராஜாவானவன் புண்யவதியையும், அளகாபுரி ராஜாவானவன் பாக்யவதியையும் வந்து கேட்டு அவர்களை விவாஹம் செய்து அவர்களை இட்டு (அழைத்துக்)கொண்டுபோனார்கள். பின்பு இளையவளான பாக்யவதியானவள் கேதார விரத நோன்பெடுப்பதை மறந்து, நாடு நகரமெல்லாம் தோற்று அதிக தரித்திரத்தையடைந்து அன்ன வஸ்திரத்திற்கும் ரொம்பவும் சங்கடப்பட்டிருந்தாள். அப்படி இருக்கும்போது ஒருநாள் தன் குமாரனைப் பார்த்து என் தமக்கை இடத்தில் போய் திரவியம் வாங்கிக்கொண்டு வாருமென்று சொல்ல, அவன் அப்படியே தன் பெரிய தாயாரிடத்தில் போய் தங்களுடைய கஷ்டத்தைச் சொல்லி திரவியம் கேட்டான். அவள் அப்படியே திரவியமும், ஆடையாபரணமும் மூட்டைக் கட்டிக் கொடுத்து, கட்டுச் சாதமும் கொடுத்தனுப்ப அவன் அதை வாங்கிக்கொண்டு நடந்து வழியில் கட்டு சாதத்தை சாப்பிடும்போது ஒரு கருடன் வந்து அந்த திரவிய மூட்டையை எடுத்துக்கொண்டு போயிற்று. அதை அவன் தன் பெரிய தாயிடத்தில்போய் சொல்ல, அவள் மறுபடியும் அநேக திரவியம் கொடுத்தனுப்ப, அதை அவன் வாங்கிக்கொண்டு நடந்து வழியில் ஒரு அணைக்கரையில் சாதம் சாப்பிடும்போது ஒரு கெண்டை மீன் வந்து அந்த திரவியத்தை முழுங்கிப் (விழுங்கிப்) போயிற்று. அதை அவன் மறுபடியும் போய் பெரிய தாயாரிடம் சொல்ல அவள் விசனித்து[35] அவனை சிலநாள் அங்கே இருக்கும்படி வைத்திருந்தாள். அப்படி அவன் இருக்கும்போது கேதார விரத நாள் வந்தது. அப்போது அவள் அவனைப் பார்த்து உன் தாயார் கேதார விரதம் எடுக்கிறாளா என்று கேட்க, அவன் இல்லை என்றான். அதை அவள் கேட்டு கேதார நோன்பை விட்டதால் இவ்வளவு ஆபத்து வந்ததென்று நினைத்து, தங்கைக்கும் ஒரு நோன்பு கயிறு செய்து விரதமிருந்து எடுத்து அந்தப் பிள்ளை கையில் கொடுத்து,

இனி இந்த நோன்பை மறக்காமல் எடுங்களென்று சொல்லி சாதம் கொடுத்தனுப்பினாள். அதை அவன் வாங்கிக்கொண்டு தன் ஊருக்கு வரும்போது முன்னே கருடனும், கெண்டைமீனும், கொண்டுபோன இரண்டு திரவிய மூட்டையும், தான் முன்னே வைத்த இடத்தில் வைத்திருந்தது. அதை அவன் எடுத்துக்கொண்டு வந்து தன் தாயார் கையில் கொடுத்து, நோன்புக் கயிற்றையுங்கொடுத்து, நடந்த சங்கதிகளையும் சொன்னான். அவள் நாம் நோன்பை எடுக்காமல் விட்டதால் நமக்கு தரித்ரம் வந்ததென்று நினைத்து அன்றுமுதல் வருஷந்தோறும் தப்பாமல் நோன்பெடுக்க, முன் கைவிட்டுப்போன நாடு நகரம் முதலான சகலமும் கைக்கு கிடைத்து சுகமாய் வாழ்ந்திருந்தார்கள்.

ஆகையால் தர்மபுத்ரரே! நீங்களும் இந்த கேதார விரத நோன்பெடுத்தால் முன்போல நாடு நகரம் முதலான சகலமும் கைக்குக் கிடைத்து சுகமாய் வாழ்ந்திருப்பீர்கள் என்று நாரத மஹரிஷியானவர் தர்மராஜனுக்குச் சொல்ல, தர்மராஜாவானவர் இந்த கேதார விரதத்தை அனுஷ்டித்து இந்த பலத்தினால் முன் கைவிட்டுப்போன நாடு நகரம் முதலான சகலமும் கையில் கிடைத்து ஒன்றும் குறைவில்லாமல் சுகமாய் வாழ்ந்திருந்தார்கள். இந்த நோன்பையெடுத்தவர்களை ஸ்ரீபரமேஸ்வரரானவர் சகலபாக்யமும் கொடுத்து சுகஜீவியாய் ரக்ஷிப்பார்.

இந்தக் கேதார விரத கதையை பக்தியாய் எழுதியவர்களுக்கும், கேட்டவர்களுக்கும் கேதாரேஸ்வரர் ஆனவர் ஐஸ்வர்யமும், சந்தான சம்பத்தும் ஜெயமும், வாழ்வும் கொடுப்பார். இந்த விரதம் எடுத்து சுகம் அடைந்தவர்கள் முதலாவது ஈஸ்வரி, இரண்டாவது தேவரிஷிகள், மூன்றாவது பாக்யவதீ, நான்காவது தர்மராஜா.

இந்த கதா புஸ்தகம் ஜயவருஷம் புரட்டாசி மாதம் 27ந் தேதி குரு வாரத்தில் பர்வத சஞ்ஜீவி அய்யர் கையால் எழுது முடிந்தது.

சுவடியில் இக்கதையின் பாட பேதமாக இந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ள விபரம் வருமாறு :-

### பேதவிஷயம் (கேதாரவிரத கதா)

1. ஈஸ்வரியானவள் போய் . . . . கருடன் சொன்னதாக கவியும் அர்த்தமுமாய் இருக்கப்பட்ட புஸ்த்தகத்தில் சொல்லப்பட்டுள்ளது.

2. ஈஸ்வரியானவள் போய் கௌதமருக்குச் சொன்னதாக சொக்கு புஸ்த்தகத்தில் இருக்கிற ஸ்லோகத்திலும் தெலுங்கு வசனத்தில் சொல்லப்பட்டுள்ளது.

3. சுவாமியின் இடதுபாகம் பெற்றால் அப்பால் ஒருவரும் ஈஸ்வரியை நீக்கி சுவாமியை மாத்திரம் பிரதட்சணம் செய்யமாட்டார்கள். ஆனதால் கேதார விரதம் எடுவென்று சொல்லி, அதன் கிரமத்தை ஈஸ்வரிக்குக் கௌதமர் சொன்னதாய் சிலவற்றில் சொல்லப்பட்டுள்ளது.

4. ஈஸ்வரியானவள் பக்தித்வம் என்றைக்கும் அழியாதிருக்கும் படி ஒரு விரதம் சொல்லவேணுமென்று கேட்க அதற்கு பரமேஸ்வரரானவர் கேதார விரதம் அனுஷ்டிக்கும்படி ஈஸ்வரிக்கு சொன்னதாய் திருக்காமியாசாரி நோன்புக் கதையில் சொல்லப்பட்டுள்ளது.

கேதார விரதத்தை நாரதர் தர்மராஜாவுக்குச் சொன்னதாய்க் கவியும் அர்த்தமுமாய் இருக்கப்பட்ட புஸ்த்தகத்தில் சொல்லப்பட்டுள்ளது.

சூதரிஷியானவர், சௌனகாதி ரிஷிகளைப் பார்த்து கிருஷ்ணரானவர் தர்மராஜாவுக்குச் சொன்னபடி, உங்களுக்குச் சொல்லுகிறேனென்று மேற்படி சூதர் சௌனகாதி முனிவர்களுக்குச் சொன்னதாய் திருக்காமியாசாரியின் புஸ்த்தகத்தில் சொல்லப்பட்டுள்ளது.

இந்தப்படி கேதார விரதக் கதையானது அநேகமான பேதங்கள் (கொண்டதாக) இருக்கின்றன.

# வரலக்ஷ்மி விரத கதா தாத்பர்யம்

கைலாச கிரியின் நுனியில் மந்தார மரத்தின்கீழ் ரத்ன சிம்மாசனத்தில் பரமேஸ்வரனும் பரமேஸ்வரியும் வீற்றிருக்கும் போது, ஈஸ்வரியானவள் ஒரு புண்யவிரதத்தையும், அதை அனுஷ்டித்தவர்களையும் சொல்லவேண்டுமென்று சுவாமியை கேட்க, சுவாமியானவர் ஈஸ்வரிக்குச் சொல்லுகிறார். வரலக்ஷ்மி விரதமென்று ஒன்று உண்டு, அதை சிராவண சுத்த பௌர்ணமிக்கு முன் வருகிற சுக்ரவாரத்தில் செய்யவேண்டும். அப்படிச் செய்தவர்கள் யாரென்றால், குண்டினபுரம் என்கிற பட்டணத்திலே பிராம்மணக்குலத்திலே சாருமதி என்று ஒரு ஸ்திரீ இருந்தாள். அவள் தன் புருஷன் சொல் தவறாமல், புருஷன்மேல் பயபக்தியாய் பதிவிரதையாய் வாழ்ந்திருந்தாள்.

அப்படி இருக்கின்ற நாளிலே, ஒருநாள் ராத்திரியில் அவள் நித்திரை செய்துகொண்டிருக்கும்போது, அவள் சுவப்னத்திலே லக்ஷ்மியானவள்போய், நான் வரலக்ஷ்மி - வருஷந்தோறும் வருகிற சிராவண சுத்த பௌர்ணமிக்குமுன் வருகிற சுக்ரவாரத்தில் என்னை நீ பூஜைசெய்தால் நீ வேண்டின வரங்களை கொடுக்கிறேனென்று சொல்ல, சாருமதி யானவள் அந்த வரலக்ஷ்மியை ரொம்பவும் ஸ்தோத்திரம் செய்ய, வரலக்ஷ்மியானவள் அவளுக்கு வேண்டிய வரங்களை ரொம்பவும் கொடுத்து அந்தர்தியானமாய் மறைந்துபோனாள். பின்பு சாருமதியானவள் நித்திரை தெளிந்து சீக்கிரமாய்ப்போய் தன் பந்துக்களிடம் அதைச் சொல்ல அவரவர் வீட்டு ஸ்திரிகள் முன்சொன்ன சுக்ர வாரத்திலே உபவாசம் இருந்து கலசம் வைத்து, அதில் வரலக்ஷ்மியை ஆவாஹனம் செய்து, பூஜித்து, பலகாரம் முதலியவற்றை நிவேத்யம் செய்து, அந்த சாருமதி முதலான அநேக சுமங்கலிகளுக்கு பக்தியாய் பூஜைசெய்து சந்தனம், புஷ்பம், தாம்பூலம் கொடுத்து வரலக்ஷ்மியை ஸ்தோத்தரித்து பின்பு பிராம்மணர்களை பூஜைசெய்து அவர்களுக்கு தக்ஷிணை, தாம்பூலம், வாயநதானமும் கொடுத்து பின்பு தாங்கள் போஜனம் பண்ணினார்கள். அப்பால் அந்த

வரலக்ஷ்மி பிரசாதத்தால் அவர்கள் வீடு சுவர்ணமயமாயும், ஐஸ்வர்யம், புத்ர, பௌத்ர, குதிரை, மாடு முதலான சகல சம்பத்துக்களும், அவர்களுக்கும் மேற்படி சாருமதிக்கும் உண்டாயிற்று. அப்பால் அவர்களில் ஒருவரோடொருவர் சாருமதி கண்டு சொன்ன சுவப்னப்படிக்கு நாம் வரலக்ஷ்மியை பூஜை செய்து அதிக ஐஸ்வர்யத்தை அடைந்தோமென்று, சாருமதியை பலவிதமாக மேன்மைப்படுத்திப் பேசிக் கொண்டார்கள். அதை பூமியில் உள்ளவர்கள் பார்த்து, அதுமுதல் வரலக்ஷ்மி விரதம் செய்கிறார்கள் என்று ஈஸ்வரரானவர் ஈஸ்வரிக்குச் சொன்னார். இந்த வரலக்ஷ்மி கதையின் தாத்பர்யம் பர்வத சஞ்ஜீவி அய்யர், புத்தகத்திலுள்ள வரலக்ஷ்மி விரத கதை ஸ்லோகார்த்தப்படி ஏற்படித்தினது.

## அனந்த விரத கதா சங்கிரஹம்

பஞ்சபாண்டவர்கள் வனவாசம் செய்திருக்கும்போது அங்கே கிருஷ்ணர்போய் அவர்களைக் கண்டார். அப்போது தர்மராஜாவானவர் கிருஷ்ணரை நமஸ்காரம் செய்து எங்களுக்கு இந்த சங்கடம் நீங்கும்படியாய் ஒன்று சொல்ல வேணுமென்று கேட்க, கிருஷ்ணர் சொல்லுகிறார்.

கேளும், தர்மராஜரே! பாத்ரபத[36] சுத்த சதுர்த்தியில் விரதமிருந்தால் சகல அசௌக்யங்களும், பாபங்களும் நீங்கி சுகப்படுவீர்கள் என்றார். அதற்கு தர்மராஜாவானவர் நீர் சொன்ன விரதத்துக்குப் பேரென்ன அப்போது பூஜை செய்ய வேண்டிய தேவதை என்ன, அது ஆதிசேஷனா, தக்ஷணா என்று; கேட்க, அதற்கு கிருஷ்ணர் ஆதிசேஷனும் நான்தான். வருஷம், மாசம், பக்ஷம் முதலானவைகளும் நான்தான். பிரும்மா, ருத்ரர் முதலானவர்களும், பதினான்கு இந்திரரும், அஷ்டவசுக்களும், சப்த ரிஷிகளும், சமுத்திரம், பூமி, மலை, நதி, விருக்ஷம், திரிலோகம் இவை முதலான சகலமும் நான்தான் நம்பு என்று சொல்ல, அதற்கு தர்மராஜாவானவர், நீர் சொன்ன விரதத்தின் பேரென்ன, அதனால் வரப்பட்ட பலலென்ன, அதை முன்காலத்தில் செய்து பலன்

அடைந்தவர்கள்யார்? அவைகளை நன்றாய்ச் சொல்லவேண்டுமென்று கேட்க கிருஷ்ணர் சொல்லுகிறார்.

கேளும் தர்மராஜாவே, முன்னே திரேதாயுகத்திலே சுமந்தன் என்று ஒரு பிராமணன் இருந்தான். அவன் ப்ருகு ரிஷியின் குமாரியான தீக்ஷா தேவியை விவாஹம் செய்து ஷீலா என்கிற ஒரு பெண்ணை பெற்றான். பின் சிலநாள் பொருத்து அவன் பார்யாளானவள் தாபஜ்வரத்தால் மரணமடைந்தாள். அப்பால் அவன் கர்க்கசை என்கிற ஒரு பிராமணப் பெண்ணை விவாஹம் செய்துகொண்டான். அவள் கடின சித்தமும் ஆசாரஹீனமும், என்னேரமும் கலகமும், ஆணவமும் ஆக இப்படி இருந்தாள். இவள் இப்படி இருக்க அந்த பிராம்மணனானவன் தன்னை வந்து கேட்ட கௌண்டின்ய ரிஷிக்கு தன் பெண்ணை விவாஹம் செய்துகொடுத்து, தன் இளைய பார்யாளைப் பார்த்து அவளுடைய கடின மனசைத் தன் மனதில் எண்ணிக்கொண்டு அவளுடன் நம்ம மருமகனுக்கும், மகளுக்கும் வஸ்த்ராபரணம் முதலாய்க் கொடுக்கவேண்டிய வரிசைகளில் கொஞ்சமாவது கொடுக்கவேண்டுமே என்று சொல்ல அதற்கு அவள், நம்ம வீட்டில் ஒன்றுமில்லையென்று சொல்லி வீட்டின் கதவைமூடித் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டாள்.

அப்போது அந்த பிராமணனானவன், அந்த கல்யாணத்திற்காக செய்த மாவில் செலவழிந்ததுபோக மீதியிருந்த மாவில் கொஞ்சம் கொடுத்துத் தன் மருமகளையும் பெண்ணையும் கூட்டியனுப்ப அவர்கள் வண்டிமேல் ஏறி தன் ஊருக்குப்போக நடந்து, அன்று மத்யான்னத்தில் வழியில் இருந்த ஒரு நதிக்கரையில் இறங்கினார்கள். அப்போது அங்கே கௌண்டின்யரானவர் ஸ்நானமும், அனுஷ்டானமும் செய்யப்போக, அன்றைய தினம் அனந்தவிரத தினமாகையால் அந்த நதிக்கரையில் அநேகமான ஸ்திரீகள் போய் பயபக்தியுடன் அனந்தபத்மநாப சுவாமியை பூஜை, விரதமெடுத்தார்கள். அதை அந்த கௌண்டின்யரின் மனைவியானவள் பார்த்து, அந்த ஸ்திரீகளின் அருகில்போய் அவர்கள் முகத்தைப் பார்த்து, நீங்கள் இங்கே என்ன

செய்கிறீர்களென்று கேட்க, அதற்கு அவர்கள் அனந்தவிரதம் செய்கிறோமென்றார்கள். அதை அவள் கேட்டு இந்த விரதம் நானும் செய்யவேணும். அதை செய்கிற விதத்தை (செய்ய) எனக்குச் சொல்லுங்கள் என்று கேட்க, அவர்கள் அந்த விரதம் செய்கிற விதத்தைச் சொல்ல, அவள் அங்கே அந்த விரதத்தைச் செய்து சயிறு கொடுக்கவேண்டும் என்று கேட்க, அவர்கள் அவளைத் தங்கள் பக்கத்தில் வைத்துக்கொண்டு அந்த விரதத்தைச் செய்து நோன்புக் கயிற்றை அவளுக்குக் கொடுத்தார்கள். அதையவள் தன் கழுத்தில் கட்டிக்கொண்டு தான் கொண்டுபோன மாவில் கொஞ்சம் பிராமணர்களுக்கு வாயநதானம் செய்து, மற்ற மீதி மாவை தானும் தன் புருஷனும் சாப்பிட்டுவிட்டு இருவரும் வண்டி மேலேறி தன் ஆஸ்ரமம் போய்ச் சேர்ந்தார்கள்.

தக்ஷன் அனந்தபத்மநாப சுவாமியின் அனுக்ரஹத்தால் அவர்கள் வீட்டில் சகல ஐஸ்வர்யங்களும் வந்து சேர்ந்தது. அப்படி இருக்கும்போது பின்பு கொஞ்ச நாளைக்குள்[37] ஒரு நாளில், அந்த கௌண்டின்ய முனிவரானவர் தன் பார்யாளுடன்[38] கூட இருக்கும்போது அவள் கையில் கட்டிக் கொண்டிருக்கிற நோன்புக் கயிற்றைப் பார்த்து கோபித்து அவள் முகத்தைப் பார்த்து இந்தக் கயிற்றை ஏன் கட்டிக்கொண்டாய்? நீ என்னை வசியம்[39] செய்யவா அல்லது வேறு ஒரு புருஷரை வசியம் செய்யவா, நிச்சயமாய்ச் சொல்லு என்று கேட்க, அதற்கு அவள் அனந்தவிரதம் எடுத்து இந்தக் கயிற்றைக் கையில் கட்டிக் கொண்டேன். அதன் பலத்தால் நமக்குச் சகல சம்பத்தும் உண்டாயிற்று. லோகத்தில் மனுஷ்யரெல்லாம் அனந்தவிரதம் செய்து தோரங்களை கட்டிக்கொள்வதால் சகல சம்பத்துக்களும் அடைகிறார்கள். ஆகையால் நானும் கட்டிக்கொண்டேனென்று சொல்ல அப்போது அவர் அதிக கோபமாகி அந்த தோரத்தை அறுத்து, எரிகிற நெருப்பில் போட தக்ஷணம் (உடனே) அவள் அதை எடுத்து பாலில் போட்டு உறியில் வைத்தாள், அன்றுமுதல் கொஞ்சநாளைக்குள் அவர்கள் வீட்டிலிருந்த சகல சம்பத்துக்களும் அழிந்தது. அவர் வீடு நெருப்புப்பட்டு வெந்துவிட்டது. அவர்கள் மேல் பகையும்.

சண்டையும் உண்டாயிற்று. போஜனத்திற்கு வழியில்லாமல் போயிற்று.

அப்போது அவர் வியசனமாகி" விரதக் கயிற்றை நாம் அறுத்துப் போட்டதால் நமக்கு இப்பேர்ப்பட்ட சங்கடம் வந்ததென்று தெரிந்து அனந்தபத்மநாப சுவாமியைப் பார்க்க வேண்டுமென்று நினைத்துக் காட்டில் போய்த் தேடினார். அப்போது அவரெதிரில் ஒரு மாமரம், அப்பால் ஒரு பசு, அப்பால் இரண்டு குளம், அப்பால் ஒரு கழுதை, அப்பால் ஒரு யானை இந்தப்படி அங்கங்கே எதிர்பட்டது. அவர் அவைகளைப் பார்த்து, பத்மநாபசுவாமியைப் பார்த்தாயா என்று கேட்க, அவைகள் நான் பார்க்கவில்லை என்று சொல்லிற்று. அப்பால் அவர் பகுதூரம்" தேடிக்கொண்டுபோய் மூர்ச்சையாகினார். அப்போது மஹாவிஷ்ணுவானவர், ஒரு பிராம்மணனைப்போல் ரூபங்கொண்டு, அவர் எதிரேபோய் அவரை விசாரித்து, அவரை அவருடைய வலது கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு வைகுண்டத்தில்போய், ரத்ன சிம்மாஸனத்தின்மேல் உட்கார்ந்து, பிராம்மண ரூபத்தை நீக்கித் தன்னுடைய ரூபத்தை அடைந்து அவருக்குத் தரிசனம் கொடுத்து "நான்தான் அனந்த பதமநாபசுவாமி" என்றார். அவர் முகத்தைப் பார்த்து தரித்ரமில்லாமலும், தர்மமனசும், அந்த்யத்தில் விஷ்ணுலோகம் அடையவும், ஆக இந்தப்படி மூன்று விரதத்தையும் அவருக்குக் கொடுத்தார்.

அப்போது அந்த கொண்டின்யரானவர் விஷ்ணுவின் முகத்தைப் பார்த்து, நான் காட்டிலே பார்த்த மாமரம், பசு, எருது, இரண்டு குளம், கழுதை, யானை, பிராம்மணன் இவைகள் எல்லாம் யாரென்று கேட்க, அதற்கு விஷ்ணுவானவர் அவைகளின் பூர்வ ஜன்மக் கதையைச்" சொல்லி, கடைசியில் பிராம்மணனைத் தானென்று சொல்லி, நீ பதினான்கு வருஷம் வரையில் அனந்த விரதம் செய்தால் உனக்கு நட்சத்திரப்பதவி கொடுக்கிறோமென்று அனந்த விரதம் செய்கிற கிரமத்தையும் சொல்லி அந்தர்தியானமாய் மறைந்தருளினார். பின்பு அந்த கௌண்டின்ய முனிவரானவர், தன் வீட்டிற்குவந்து அனந்தவிரதம் செய்து, சகல

சம்பத்துக்களும், புத்ர, பௌத்ர, தனதான்யம் முதலானதும் பெற்று, தன் பார்யாளுடன் சுகித்து[43] வாழ்ந்து அந்தயத்தில் நட்சத்திர மண்டலத்தில்போய் நட்சத்திர ரூபமானார்கள்.

இவை தவிர சகரன், தீலிபன், பரதன், ஹரிச்சந்திரன், ஜனகன் இவர்கள் முதலான அநேக ராஜாக்கள் இந்த விரதத்தை அனுஷ்டித்து ராஜ்யபாரம் செய்து சுகமுடன் வாழ்ந்தார்கள். அகஸ்தியர் இந்த விரதத்தை அனுஷ்டித்து லோகத்தில் பிரசித்தரானார். எல்லாவிரதத்திலும் இது உத்தமமானது. ஆகையல் இதை உனக்குச் சொன்னேன். இந்தக் கதையைப் படித்தவர்களும், கேட்டவர்களும், அஷ்ட ஐஸ்வர்யங்களையும் அனுபவித்து பாபம் நீங்கி நல்ல கதியை அடைவார்கள் என்று கிருஷ்ணரானவர் தர்மராஜாவுக்குச் சொன்னார். அனந்த விரதகதை சம்பூர்ணம்..

இந்நூல் துன்முகி வருஷம் மார்கழி மாதம் 9ந் தேதி மங்களவாரம், அபரபக்ஷத்வீதியை திதி, புனர்வசு நட்சத்திரம் இவைகள் கூடிய சுபதினத்தில் மத்யான்ன காலத்தில் பர்வத சஞ்ஜீவி அய்யர் ஹஸ்தத்தால் எழுதி சமாப்தியாயிற்று.

# சிலுகத்வாதசீ விரத கதைச் சுருக்கம்

